விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 305 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை (20.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பொது முடக்கத்துக்கு முஸ்லிம்கள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள பொது முடக்கத்துக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் தமது முழுமையான ஆதரவை தருவார்கள் என யாழ்.முஸ்லிம் இளைஞர் கழகத் தலைவர் என்.எம்.அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

15

## பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் புறக்கணிக்குக

### தமிழ்க் கட்சிகள் கூட்டாக கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் இன்று வெள்ளிக்கிழமை புறக்கணிக்குமாறு தமிழ் கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

இது தொடர்பில் தமிழ் கட்சிகள் அனுப்பி வைத்த செய்தி குறிப்பில்,

நாளை (இன்று) நிகழவுள்ள பொது முடக்கம் முழுமையாக வெற்றியீட்டுவதை உறுதிப்படுத்துவது நம் எல்லோருடைய கடமை

15

# வடக்கு – கிழக்கில் இன்று ஹர்த்தால்



- வர்த்தகர்கள் முழுமையான ஆதரவு
- சட்டத்தரணிகளும் நீதிமன்றை புறக்கணிப்பர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவை அச்சுறுத்தியதைக் கண்டித்தும் நீதியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரியும் வடக்குக் கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பஸ் நிலையத்தில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை புதிய பேருந்து நிலைய

15

## தமிழீழ விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் குறித்த கருத்து

### வழக்கிலிருந்து விஜயகலா விடுதலை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் குறித்த வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை விடுதலை செய்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

15

## ஜனாதிபதி ரணில் சீன ஜனாதிபதியுடன்

### இன்று விசேட சந்திப்பு

(பீஜிங்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இன்று சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மற்றும்

15

## அறிவை மையமாகக் கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்புக

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பல்கலைக்கழக முறைமையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று ஆற்றிய உரையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

15

## நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

### இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை, அவசியமான எரிபொருளுக்கான டெண்டர்செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டதால் அதுவரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்றும் மின்சக்தி மற்றும்

15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2024 - 31.12.2024 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-20/10/2023 இல் இருந்து 02/11/2023 ஆம் திகதி 3.00 மணி வரை

02. கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 03/11/2023 காலை 10.00 மணி வரை

03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 03/11/2023 காலை 10.00 மணி

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத் தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

06. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.

07. கறைநிறப் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்டறியப்படின் அக்கேள்விப்பத்திரம் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பின் தன்னியல்பாக இரத்தாகும்.

08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாதுவிடின் எதுவித அறிவித்தலும் இன்றி விண்ணப்பம் நிராகரிக்க பிரதேசசபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.

09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

10. சந்தையின் அண்மை மையப்பகுதியிலிருந்து 01 கி.மீற்றர் தூர அளவைக் கொண்டதுடன் சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி மற்றும் சந்தைப்பொருட்கள் விற்பதும், சபையின் இறைச்சிக்கடையின் சூழ உள்ள பகுதியில் விற்பதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

11. மரக்கறி, மீன் ஆகிய சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக ஒப்பமிட வேண்டும்.

I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு (நிறுத்தற் கருவி) உற்பத்தியாளரால் தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும், குத்தகைதாரரினால் பயன்படுத்தப்படும் அனைத்து தராசுகளும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் நிறுவை அளவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் எச்சந்தர்ப்பத்திலும் சபைக்கு சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

II. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பிரதேசசபையால் தெரிவுசெய்யப்பட்ட இடமொன்றை விவசாயிகளுக்கு குத்தகைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்படும். ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடம் இருந்து பிரதேச சபைச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வீதவரியை அறவிடுதல் வேண்டும். விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு ஏலமிட்டு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் பத்து சதவீத கழிப்பனவு எந்த தரப்பினரும் சந்தை வளாகத்தில் அறவிடுதலாகாது.

III. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, மொத்தத் தொகை, அறவிடப்படும் வரித்தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும். பாவிக்கப்படும் பற்றுச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதேசசபையால் வடிவமைக்கப்பட்ட முத்திரை ஒன்றை பதித்திருத்தல் வேண்டும்.

IV. உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே உற்பத்தியாளராலேயே தரத்திற்கேற்பவும், ஏலமிடல் மூலமும் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குத்தகைதாரர் அவ்விடத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும். அல்லது குத்தகைதாரரால் எழுத்து மூலமாக கோரிக்கையை முன் வைத்து சபையால் முன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக வேண்டும். இவ் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி, குத்தகைதாரர் இருவரும் ஒரே நேரத்தில் பிரசன்னமாய் இருத்தல் ஆகாது.

V. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏல விலையின் உச்சமாக 4% (சதவீத) வரி மட்டுமே குத்தகை ஒப்பந்ததாரரால் அறவிடப்படலாம்.

VI. பிரதேசசபையினால் அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் பிறிதொரு பிரதேசசபையினால் வியாபார உரிமம் பெற்று கொண்டுவரப்படும் விற்பனை பற்றுச்சீட்டிற்கு குத்தகையாளரினால் வரி அறவிடக் கூடாது, நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.

VII. சந்தைக்கு வருகை தருகின்ற நுகர்வோர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதியுடன் தரிப்பிடம் வழங்கப்பட வேண்டும் குத்தகைதாரரால் இச்சேவைக்காக சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பற்றுச்சீட்டை வழங்கி அறவிடமுடியும்

12. இறைச்சிக் கடைகளிற்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக ஒப்பமிட வேண்டும்.

I. பிறிதொரு பிரதேசசபையின் குத்தகைதாரராக இருப்பின் இறைச்சிக்கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

II. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும் சபையின் .குத்தகைதாரர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவர் நடாத்துவதாக உறுதி செய்யப்படின் குத்தகை ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்தானதாக கருதப்படும்.

III. எமது பிரதேச சபையால் நிர்வகிக்கப்படுகின்ற கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட வேண்டும்.

IV. இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்டதிட்டங்களிற்கமைவாக குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.

V. கொல்களம் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளரால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் நிலையங்களில் தொற்றுநோயற்ற உடல் ஆரோக்கியம் கொண்டவராக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதித்து மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

13. உரிய நிதி ஆண்டின் மாதாந்த கேள்விதொகையை சமனான தவணைக் கட்டணங்களாக செலுத்த வேண்டும் என்பதுடன், முதல் மூன்று மாத தவணைக்கட்டணத்தையும் மார்கழி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் அடுத்துவரும் மாதங்கள் 10ம் திகதிக்கு முன் குத்தகை மாதாந்த கேள்வி தொகையை செலுத்துதல் வேண்டும். எனினும் முற்பணம் செலுத்திய 3 மாத கேள்வி தொகையும் நிதியாண்டின் இறுதி 3 மாதங்களிற்கும் சீர்செய்யப்படும்.

14. மேற்கூறிய நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மீறுவாராயின் அல்லது அக்கடைக்கான குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குத்தகைக்காரர் நடப்பாராயின் எந்த நேரத்திலும் குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் என்பதுடன் 1/3 பங்கு முற்பணம் மீள வழங்கப்படாது நடைபெற்ற காலப்பகுதிக்கான நிலுவையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்யவும், சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.

15. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையினால் முன்வைக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அதற்கு கட்டுப்பட்டவராக செயற்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

16. மேலதிக விபரங்களை உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

**2024ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்**

| தொ .இல | குத்தகை விபரம் | 2024 ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | **நெல்லியடி உப அலுவலகம்** | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை (அங்காடி நீங்கலாக) | 15,621,700.00 | 156,217.00 | 1000.00 | - |
| 2 | நெல்லியடி சந்தை வாகனத் தரிப்பிட நிலையம் | 600,000.00 | 6,000.00 | 500.00 | - |
| 3 | கோயிற் சந்தை | 175,800.00 | 1,758.00 | 500.00 | - |
| 4 | கோயிற் சந்தை வாகனத் தரிப்பிட நிலையம் | 80,000.00 | 800.00 | 500.00 | - |
| 5 | கொட்டடிச்சந்தை | 550,600.00 | 5,506.00 | 500.00 | - |
| 6 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 56,500.00 | 565.00 | 500.00 | 100.00 |
| 7 | நெல்லியடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,151,700.00 | 11,517.00 | 500.00 | 100.00 |
| 8 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 304,700.00 | 3,047.00 | 500.00 | 100.00 |
| 9 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,015,200.00 | 20,152.00 | 500.00 | 100.00 |
| 10 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 117,700.00 | 1,177.00 | 500.00 | 100.00 |
| 11 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 601,600.00 | 6,016.00 | 500.00 | 100.00 |
| 12 | நெல்லியடி மீன் சந்தை | 578,800.00 | 5,788.00 | 500.00 | - |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | | |
| 13 | உடுப்பிட்டி சந்தை | 1,848,700.00 | 18,487.00 | 500.00 | - |
| 14 | அந்திரான் சந்தை | 138,100.00 | 1,381.00 | 500.00 | - |
| 15 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 796,400.00 | 7,964.00 | 500.00 | 100.00 |
| 16 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,980,000.00 | 19,800.00 | 500.00 | 100.00 |
| 17 | நவிண்டில் சந்தை | 36,500.00 | 365.00 | 500.00 | - |
| 18 | மண்டான் சந்தை | 52,800.00 | 528.00 | 500.00 | - |
| 19 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 248,200.00 | 2,482.00 | 500.00 | 100.00 |
| 20 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,831,500.00 | 18,315.00 | 500.00 | 100.00 |
| 21 | உடுப்பிட்டிச்சந்தை வாகனத் தரிப்பிட நிலையம் | 204,500.00 | 2045.00 | 500.00 | - |
| 22 | சாண்டா சந்தை கோழிக்கடை | 82,000.00 | 820.00 | 500.00 | 100.00 |
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | | | | |
| 23 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 65,500.00 | 655.00 | 500.00 | 100.00 |
| 24 | துன்னாலை வடக்குச் சந்தை | 83,200.00 | 832.00 | 500.00 | - |

**கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**
**20/10/2023.**

C-7454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலைகளை உடன் நிறுத்துங்கள்
## பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஐ.நா அலுவலகம் முன் போராட்டம்




(கொழும்பு)

பாலஸ்தீன மக்களுடனான தமது ஆதரவை வெளிப்படுத்தியும், காசாவில் இடம் பெற்று வரும் தாக்குதல்களை நிறுத்துமாறு வலியுறுத்தியும் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பெருமளவானோர் கலந்துகொண்டு தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

ஹமாஸ் அமைப்பினால் கடந்த 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் - ஹமாஸ் மோதலின் நீட்சியாக கடந்த சில தினங்களாக காசாவில் இஸ்ரேலிய படையினர் நடத்தி வரும் தாக்குதல்களால் சிறுவர்கள் உட்பட பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவளித்து வரும் நிலையில், அந்நாடுகளில் பெருந்திரளான மக்கள் ஒன்று கூடி அந்த அரசாங்கங்களுக்கு எதிராகவும், பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தவகையில் பாலஸ்தீன மக்கள் மீதான இலங்கையர்களின் ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கிலான "ஒருமைப்பாட்டு" போராட்டமொன்று உலகளாவிய நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர்கள் அமைப்பினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6)

# வடக்கில் மீன்பிடித் தொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயம்
### கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் மீன் பிடித் தொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.**

இதன் மூலம் மீன்பிடி தொழில் தொடர்பான முதலீடுகளை கொண்டுவர முடியும் எனவும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு இதன் ஊடாக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலுக்கும் மட்டுமன்றி நுகர்வோருக்கும் பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் இடைத்தரகர்கள் குழுவொன்று முறையற்ற இலாபம் ஈட்டுவதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே அத்தகைய மீன்பிடி மாபியாவை முடிவுக்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (நி-5-6)



## சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் 'மரியா பெர்னாண்டா கார்ஸா' நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்தார்.

ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள மரியாவை இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் ஷனில் அன்டனிபெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர். உலகின் 170 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும், சர்வதேச வர்த்தக சம்மேளனமானது உலகின் மிகப் பெரிய மற்றும் பலம் வாய்ந்த அமைப்பென்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மட்டக்களப்பு மயிலத்தமடு பண்ணை கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டு வரும் நிலை காணப்படுவதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் மயிலத்தமடு பகுதியில் கால்நடை பண்ணையாளரின் மாடு ஒன்று மீது துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேய்ச்சல் தரை பண்ணையாளர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு அங்கு சட்ட விரோத பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் பண்ணையாளர்களின் கால் நடைகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



கடந்த மூன்று தினங்களுக்குள் மூன்று கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பண்ணையாளர்களின் குடியிருப்புகளும் அண்மையில் சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களினால் எரியூட்டப்பட்டிருந்த நிலையில் தொடர்ச்சியாக கால்நடைகள் மீதும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அப்பகுதியில் புத்தர் சிலையும் வைக்கப்பட்டு சட்ட விரோத குடியேற்ற செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ள நிலையில் சட்ட விரோத காணி அபகரிப்பாளர்களை வெளியேற்றும் வரையில் போராட்டத்தினை கைவிடப்போவதில்லையென கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# விவசாயிகளுக்கு உரிய ஊதியம் கிடைக்க நடவடிக்கை எடுங்கள்
### விவசாய அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயிகளுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சரிடம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையில் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏற்றுமதி மற்றும் தர நிர்ணயப்பிரச்சினை எமது மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றது. கொழும்பிலுள்ள இலங்கை கட்டளைத் திணைக்களத்துடன் விவசாயிகள் தொடர்பு கொள்வதற்கு தூரம், மொழி என்பன பெரும் சவாலாக காணப்படுகின்றது.

அதேபோல் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சுங்கத் திணைக்களம் ஆகியவற்றுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை விவசாயிகளுக்கு உள்ளது. எனவே சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றை இலகுபடுத்துவதற்கு விசேட திட்டங்களை மேற்கொண்டு செயற்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு முழுமையான பலனை பெற்றுக் கொடுக்க முடியும் என தெரிவித்தார். (நி-5-6-33)

## எலிக்காய்ச்சல் பரவல் அவதானத்துடன் செயற்படுங்கள்
### விவசாயிகளுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

எலிக்காய்ச்சல் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதாரத்துறை விவசாயிகளை எச்சரித்துள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் சுகாதாரத்துறையால் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எலி காய்ச்சலினால் நாட்டில் வருடமொன்றுக்கு 7 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 125 பேர் வரை உயிரிழப்பதாகவும் சுகாதாரத்துறை குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

## யாழில் கையெழுத்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)


மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்னால் முன்னெடுத்த கையெழுத்து போராட்டத்தில் "ஐ.எம்.எப். மரணப் பொறியை தோற்கடிப்போம்" "ரணில் - மோடி திருட்டு ஒப்பந்தம் வேண்டாம்" எனும் தொனிப் பொருளில் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சதம் அடித்து அசத்தினார் விராட் கோலி
# பங்களாதேஷை வீழ்த்தியது இந்தியா



உலகக்கிண்ண கிரிக்கெட்டில் விராட் கோலியின் சதத்துடன் பங்களாதேஷை வீழ்த்தியது இந்திய அணி.

உலகக் கோப்பை 2023 தொடரில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடையேயான போட்டி புனேவில் நடைபெற்றது. இந்த போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது.

பங்களாதேஷ் அணிக்கு தொடக்க வீரர்களாக களமிறங்கிய தன்சித் ஹாசன் மற்றும் லிட்டன் தாஸ் ஜோடி சிறப்பான தொடக்கத்தை கொடுத்தது. இருவரும் முறையே 51 மற்றும் 66 ரன்களை குவித்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய நஜ்முல் ஹுசைன் மற்றும் மெஹிடி ஹாசன் முறையே 8 மற்றும் 3 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

போட்டி முடிவில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 256 ரன்களை குவித்தது. இந்தியா சார்பில் சிறப்பாக பந்துவீசிய ரவீந்திர ஜடேஜா, முகமது சிராஜ் மற்றும் ஜஸ்பிரித் பும்ரா தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஷர்துல் தாக்கூர் மற்றும் குல்தீப் யாதவ் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இந்திய அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய கப்டன் ரோகித் ஷர்மா மற்றும் சுப்மன் கில் நல்ல தொடக்கம் கொடுத்தனர். இருவரும் முறையே 48 மற்றும் 53 ரன்களை குவித்தனர். அடுத்து களமிறங்கிய விராட் கோலி நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தார். இவருடன் விளையாடிய ஸ்ரேயாஸ் அய்யர் 19 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கே.எல். ராகுல் பொறுப்பாக ஆடினார். இதன் காரணமாக இந்திய அணி 41.3 ஓவர்கள் முடிவில் 261 ரன்களை குவித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. விராட் கோலி 97 பந்துகளில் 103 ரன்களை அடிக்க, கே.எல். ராகுல் 34 ரன்களுடன் களத்தில் இருந்தார். (ம-7)



# ரோகித் சர்மாவுக்கு அபராதம்



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக ரோகித் சர்மா உள்ளார். இவரது தலைமையில் இந்திய அணி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தியா கடந்த 14 ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மகாராஷ்ரா மாநிலத்தில் உள்ள புனே நகரில் நேற்று பங்களாதேஷத்தை எதிர்கொண்டது.

இரண்டு போட்டிக்கும் இடையில் சுமார் நான்கு நாட்கள் இடைவெளி இருந்ததால் ரோகித் சர்மா சொந்த வேலை காரணமாக மும்பை சென்றதாக தெரிகிறது.

நேற்று முன்தினம் மீண்டும் அணியுடன் இணைய சொகுசு காரில் வந்துள்ளார். அவர் மும்பை- புனே எக்ஸ்பிரஸ்வே சாலையில் மின்னல் வேகத்தில் வந்துள்ளார். இந்த சாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 200 கி.மீ. வேகத்தையும் தாண்டி, 215 கி.மீ. வேகத்தில் அவரது கார் வந்துள்ளது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அவரது வாகனம், போக்குவரத்து விதிமுறையை மீறியதற்கான மூன்று அபராத ரசீதை பெற்றுள்ளது.

ரோகித் சர்மா சென்றது லாம்போகினி உருஸ் சொகுசு கார் ஆகும். (ம-7)

## உலகக்கிண்ண கிரிக்கெட்
# இலங்கை குழாமில் மத்தியூஸ், துஷ்மந்த சமீர





உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை குழாமில் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோரை மேலதிக வீரர்களாக உள்வீர்க்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இவர்களை இந்தியாவிற்கு அனுப்ப விளையாட்டு அமைச்சரின் அனுமதியை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் கோரியுள்ளது. (ம-7)




## உலகக்கிண்ண கிரிக்கெட் - 2023
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 4 | 4 | 0 | 8 |
| 2 | இந்தியா | 4 | 4 | 0 | 8 |
| 3 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| 5 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 6 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 2 |
| 7 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 2 |
| 8 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 2 |
| 9 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 2 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு நவராத்திரியில் வீட்டிலும் ஆலயத்திலும் துர்க்கா, மகாலட்சுமி, சரஸ்வதி வழிபாடு செல்வத்துள் செல்வமாகிய அருள் செல்வம் பெறுவோம் திருக்கோவில் ஓடியும் திருவருள் தேடுவோம்



**உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகும் அன்பு**
**படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே**
**அடைத்தனை நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருட் புனலால்**
**துடைத்தனை சுந்தரி, நின் அருள் ஏதென்று சொல்லுவதே!**
**அபிராமி அந்தாதி - 27**

அபிராமி தேவியே! நின்திருவடிமலர் இரண்டையும் என் சிரசில் சூடும் திருத்தொண்டை எனக்கே வரையறுத்தருளினை. அதனால் என்மனமாசுகளை நின் கிருபை வெள்ளத்தால் முற்றற நீக்கினனை. அதனால் நெக்குருகும் மனத்து அன்பினையுண்டாக்கினை. பிறவி வரும் வழியையும் அடைத்தனை.

சிறுதொழில், சிறுமதியுடையேன் இப்பேரளுரை யாதென்று சொல்லிப் புகழ்வேன் துதிப்பேன் பாடுவேன் "ஓம் அபிராமி"

புரட்டாதி திங்களில் வருகின்ற ஒன்பது தினங்களில் வருகின்ற ஒன்பது அழகிய இரவுகளிலும், முதல் மூன்று நாளும் துர்க்கை வழிபாடு பகைவர்களது பகையை மிகுதியும் வெல்லுவார்கள், அடுத்த மூன்று நாளும் திருமகள் விரதத்தால், செல்வத்தைப் பெறுவார், இறுதி மூன்று நாளும் கலைமகள் சக்தியை நினைந்து நிலைபேறான கல்வியையும் அறக்கல்வியையும் பெறுவார்கள். ஓம் சக்தி குற்றமற்ற உண்மை ஞானத்தையும் அடைவர். துர்க்காதேவி வலிமை மிக்க மகிடாசூரனை அழித்து தேவர்கள் வாழச் செய்த நாள் நவராத்தி நாளன்று கூறுவர்.



திருமூலர் : தேவதேவர் தொழும் தேவி
**ஆமயன் மால் அரன் ஈசன் சதாசிவன்**
**தாமடி சூடிநின்று எய்தினர் தம்பதம்**
**காமனுஞ் சாமன் இரவி கனலுடன்**
**சோமனும் வந்தடி சூடநின் றாளே.**
திருமந்திரம் - (1208)

ஆக்கும் தொழிலைச் செய்கின்ற **பிரமன்** ஆம் அயன், **திருமால், சிவன்** நாமும் அரன், **உருத்திரன், ஈசன், சதாசிவன்,** ஆகிய ஐவரும் இறைவியின் தாமரைத் திருவடி மலர்களை சூழநின்று திருவருள் பெற்று **தம்பதவிக்காக செயல்களை மேற்கொள்ளும் ஆற்றல் பெற்றனர்.** நாமும் புரட்டாதி மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் நவமியீறாகவுள்ள ஒன்பது இரவுகளும், பத்தாம் நாள் விசயதசமி திருவருட்சக்தியாகி தேவியை வழிபடுவதற்கு ஏற்ற புண்ணிய காலம் இந்த நவராத்தியில் அண்மையில் உள்ள **ஆலயத்திலும் வீட்டிலும் வழிபடுவோம்.**

யாழ்.மக்கள் எல்லோரும், நல்லூர் சிவன் கோயில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவில், வீரகாளிஅம்பாள், திருநெல்வேலி சிவன், முத்துமாரிஅம்பாள் இங்கும் எங்கும் சிறப்பான வழிபாட்டுப் பூசைகள் திருவருள் காட்சியை இந்த பத்துநாளும் நேரத்தை ஒதிக்கி அம்பாளை தரிசித்து, திருவடிகளை வணாங்கி, அருள் தீட்சை பெறுவோம்.

திருவருட் சக்தியைத் துணையென நம்பினால்
மனவலி தொலைய வீடுபேறு கைகூடும்.
**திரைகடல் ஓடியும் .......திரவியம் தேடு**
**திருக்கோயில் ஓடியும் திரு அருள் தேடு**
**மானிடம் செழிக்க மாமழை பொழிந்து**
**அபிராமி பட்டர் திருவடிகளை வணங்கி**
**தினம் தினம் அபிராமி அந்தாதி ஓதுவோம்**





**க.கு.க.சிவபாலன்**
**மாணிக்க வாசகர் மடலாயபோசகர்**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**

(7455)

# தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளை சந்தித்த அமெரிக்க பிரதிநிதிகள்



(கொழும்பு)

அமெரிக்க காட்டர் சென்டர் பிரதிநிதிகளுக்கும் இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளுக் கும்இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம்கொழும்பிலுள்ளஹோட் டலில் நடைபெற்றது. (நி-5-6)

# மரத்தில் மோதியது பேருந்து மாணவர்கள் உட்பட 15 பேர் காயம்

(கொழும்பு)

வீதியை விட்டு விலகிய பேருந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பாட சாலை மாணவர்கள் இருவர் உட்பட 15 பேர் காயமடைந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத் திலிருந் து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்தே மரதன் கடவல பிரதேசத்தில் விபத்துக் குள்ளானது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த விபத்தில் காய மடைந்தவர்கள் மரதன்கட வல வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் மேலதிக சிகிச்சைக்காக அனு ராதபுரம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதா கவும் வைத்தியசாலைத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துச்சம்பவம் தொடர்பில் மரதன்கடவல பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(நி-5-6)



# இராசிபலன்

20.10.2023
ஐப்பசி 03, வெள்ளிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.36 மணிவரை

மூலம் முன்னிரவு 7.42மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சஷ்டி விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்-ரோகினி
மிருகசீரிடம்

**வளவன்**




**மேஷம்**

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




**கடகம்**

பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்புண்டு.




**துலாம்**

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




**மகரம்**

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.




**ரிஷபம்**

உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், குடும்பத்தில் சிறு சிறு கருத்த முரண்பாடுகள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.




**சிம்மம்**

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணி காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




**விருச்சிகம்**

அனைத்திலும் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




**கும்பம்**

குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த பண வரவுகள் வந்த சேரலாம், காரிய அனுகூலமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




**மிதுனம்**

ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பகையொன்று நட்பாகலாம்.




**கன்னி**

காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



**தனுசு**

சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.



**மீனம்**

மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

தவறான காரியங்களில் நம்பிக்கை தோற்றுப் போவது இயற்கைள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தாருங்கள்

## பசுந் தேசம் அமைப்பு கோரிக்கை

(சாவகச்சேரி)

பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்ற சாவகச்சேரி நகரசபையின் தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பசுந்தேசம் அமைப்பு வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கடந்த 2016ஆம் ஆண்டு மக்கள் குடியிருக்க முடியாத கடலோடு இணைந்த மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராமங்களில் காணியற்ற 60குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த தூய்மைப் பணியாளர்களது குடியிருப்பில் இருந்து வெறுமனே 300மீற்றர் தூரத்தில் சாவகச்சேரி நகரசபையின் கழிவு சேகரிக்கும் மையம், கொல்களம் மற்றும் சுடுகாடு ஆகியன காணப்படுவதால் இந்த மக்கள் இயற்கையின் தாக்கத்திற்கு மேலாக சுகாதார பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர்.

எனவே உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி மக்களது நலனைக் கருத்திற் கொண்டு சாவகச்சேரி நகரசபை தமது கழிவு மையத்தை பாதுகாப்பான வேறு ஓர் இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதுடன் நகரின் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உடனடியாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5-6-30)

# இலங்கையின் கடன் மீட்சிக்காக சீனா முழுமையான ஆதரவளிக்கும்

(கொழும்பு)



இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக சீன நிதி அமைச்சர் லியு குன் தெரிவித்தார்.

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை நேற்று வியாழக்கிழமை காலை பீஜிங்கில் இடம்பெற்றதோடு இதன் போதே சீன நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த சீன நிதியமைச்சர் நெருக்கடியை சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார். (நி-5-6)

# மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை நிறைவேற்ற ஆளுநர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த திட்டங்களை முன்னெடுக்கும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை அன்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சமூகசேவைகள் திணைக்களத்தினரால், மாற்றுத் திறனாளிகளை உள்வாங்குவதற்கான கொள்கையின் வரைபுவடமாகாண ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ் வரைபில் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் வழிகாட்டல், வேலை வாய்ப்பு, அணுகு வசதிகள், சுகாதாரத் தேவைகள், போக்கு வரத்து முதலியன சம்மந்தமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இதில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், சமூகசேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், மருத்துவ அதிகாரிகள், செயற்றிட்ட அதிகாரிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (நி-5-6-33)

# அனைத்து புகையிரதங்களும் மாங்குளத்தில் நிறுத்தப்படும்

(நெளுக்குளம்)

மாங்குளம் புகையிரத நிலையத்தில் நாளை சனிக்கிழமை முதல் கடுகதி புகையிரதங்கள் உட்பட்ட அனைத்து புகையிரதங்களும் நிறுத்தப்படும் என புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி 05.10 க்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் 10.42 க்கு மாங்குளத்தை வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும் (ஒவ்வொரு சனிக்கிழமைகளில்) யாழ் நிலா இரவு 10.00 மணிக்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு அதிகாலை 4.20 க்கு வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும் (வெள்ளிக்கிழமை மட்டும்), காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.15 க்கு புறப்படும் குளிரூட்டிய கடுகதி புகையிரதம் மாங்குளத்திற்கு 2.54 இற்கு வந்தடைந்தது கொழும்பை நோக்கி செல்லும் (ஞாயிறு மட்டும்), யாழ். நிலாபுகையிரதம் காங்கேசன் துறையில் இருந்து இரவு 10.30 இற்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு இரவு 11.20 க்கு வந்தடைந்து கொழும்பு நோக்கி செல்லும். (ஞாயிறு மட்டும்) இதனைவிட ஏற்கனவே நிறுத்தப்பட்டுவந்த அனைத்து புகையிரதமும் வழமைபோல் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-299)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - உருத்திரபுரேஸ்வரன் பெண் சாவித்திரி
முகவரி - அம்பாள் கோவிலடி, பன்னாலை, தெல்லிப்பளை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் -11 நகுலேஸ்வரம் கருகம்பனை வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் 10713 ஆம் இலக்கத்தில் 2016.03.27 ஆம் திகதியில் முடிந்த நன்கொடை உறுதிப்படி உருத்திரபுரேஸ்வரன் கிரீடன் என்பவர் உருத்திரபுரேஸ்வரன் பெண் சாவித்திரிக்கு நன்கொடையளித்துள்ளார். குறித்த உறுதியின் தாய் உறுதி 2011 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் ப.இராசகுரு முகதாவில் 8091 ஆம் அறுதி உறுதி மூலம் உருத்திரபுரேஸ்வரன் கிரீடன் என்பவரால் அறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டி இறையுமான "அரசடி" நிலப்பரப்பு 4 பரப்பு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.மயூரன் அவர்கள் வரைந்த 338-2023.09.13 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-1 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - தனபாலசிங்கம் பெண் மல்லிகாதேவியின் ஆதனம்
வடக்கு -மேற்படி படத்தின் 3ம் துண்டான கிரீடவசவேஸ்வரன் உருத்திரபுரேஸ்வரனின் ஆதனம்
மேற்கு - மேற்படி படத்தின் 4 ஆம் துண்டான பன்னிரண்டு (12) அடி அகலப்பாதை
தெற்கு -றோட்டு

மேற்குறித்த ஆதனத்தை உருத்திரபுரேஸ்வரன் பெண் சாவித்திரி எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(1751?)

SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෙෙ ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

## திருக்குறள் பாவோதல் போட்டி - 2023

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் முதலானவை வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மாட்(Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

(இ)

தொடர்புகளுக்கு 0767427596

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், பனுவல் Book Mart

ஊடக அனுசரணை "வலம்புரி"

நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கோலை ஸ்பரிசம் செய்த மன்னப்பெரும எம்.பிக்கு தடை



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெருமவுக்கு நேற்று முதல் தொடர்ந்து நான்கு வாரங்களுக்கு பாராளுமன்ற சேவைகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற செங்கோலை ஸ்பரிசம் செய்தமையால் இவ்வாறு அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்ற செங்கோலை ஸ்பரிசம் செய்தமையானது பாராளுமன்ற ஒழுங்கு முறைகளுக்கு எதிரானது என தெரிவித்த சபாநாயகர் பாராளுமன்ற ஒழுங்கு விதிகளை அனைத்து உறுப்பினர்களும் ஒழுங்காக கடைபிடிக்குமாறும் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போதே அஜித் மன்னப்பெரும இவ்வாறு செங்கோலை ஸ்பரிசம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வாய்மூல கேள்விகளுக்கான சந்தர்ப்பத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர்களுக்கிடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன சபை அமர்வுகளை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார். (நி-5-6)


## அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு பிற்போடல்

பார்வையற்றவர்கள் மீது அக்கறையோடு வாழ்ந்து வருகின்ற பாசமிகு உறவுகளே வணக்கம். யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தால் பார்வையற்றவர்களின் கல்வி முதலான பன்முகப் பணிகளுக்காக ஆண்டுதோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு செயற்றிட்டமானது இந்த ஆண்டும் 15.10.2023 அன்று அதிஷ்டம் பார்க்கும் கால எல்லையாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆயினும் இவ் அதிஷ்ட இலாபச் சீட்டின் அதிஷ்டம் பார்க்கும் காலம் 03.12.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகின்றோம். (இ)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்

## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
## இல.528, பலாலி வீதி, திருநெல்வேலி


விஜயதசமி பூசையும், ஏடு தொடக்கலும், புதிய மாணவர்களைப் பதிவு செய்தலும் 24.10.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு

இலங்கையின் முன்பள்ளி தேசிய தராதரங்களுக்கு அமைவாக,

2+ Play Group, 3+ Montessori, 4+ Pre School

சிறுவர்களுக்கு உகந்த மிகப்பாதுகாப்பான சூழலில் சுதந்திரத்துடன் கூடிய மகிழ்ச்சிகரமான விளையாட்டு-அழகியல் வழிக்கற்றல்.....





"களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கை வரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு, அர்ப்பணிப்பு..."

வேலை செய்யும் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப 2.00 மணிவரை சிறார்கள் மகிழ்வுடன் விளையாடிக் கற்க வசதிகள்...

"ஆடல், பாடல், வினோத விளையாட்டுக்கள், போலச் செய்தல், கற்றல் வட்டங்கள், மணல், நீர் விளையாட்டுக்கள், தசைநார் பயிற்சிகள், முன்மொழித் தேர்ச்சி, முன்கணிதம், சுற்றாடல் என்பவற்றினூடு"

"ஆரம்பப் பாடசாலைக்குச் செல்வதற்கான அனைத்துத் தேர்ச்சிகளும் வழங்கப்படும்..."

கலாநிதி.பா.தனபாலன்,
நிபுணத்துவ ஆலோசகர்.

திருமதி.கர்ணிதனபாலன்,
பணிப்பாளர்.
TP-076 848 5213

24.10.2023 செவ்வாய்க்கிழமை விஜயதசமி அன்று காலை 8.30 மணிக்கு கலாநிதி.பா.தனபாலன் அவர்களால் ஏடு தொடக்கப்படும். உரியவர்கள் முற்கூட்டியே பதிவு செய்யவும். (17508)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2943

**சாமினி**




**சங்கீதன்**





**அபினாஸ்**




**சது**




**கவிதா**




**சாரியன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# காசா மருத்துவமனை மீத
# ஆதாரங்களை வெளியிப

(ஜெருசலேம்)

**காசாவில் மருத்துவமனை தாக்குதலை தாங்கள் நடத்த வில்லை என இஸ்ரேல் தக்க ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.**

காசாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலால் 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், இது முழு உலகையும் அதிர்ச்சியடைய செய்தது.

குறித்த தாக்குதலினால் கண்டனங்கள் குவிந்து வந்த நிலையில், தாக்குதலை நிகழ்த்தியது இஸ்ரேல் என பாலஸ்தீனிய அதிகாரிகள் குற்றம் சாட்ட, இஸ்ரேல் தரப்பு அதை மறுத்துள்ளது.

மேலும், காசா மருத்துவமனை தாக்குதலுக்கு காரணம் பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் என்னும் அமைப்பு என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அதேவேளை, குறித்த தாக்குதலுக்கான சரியான ஆதாரங்களாக ட்ரோன் காட்சிகள், சில உரையாடல்கள் ஆகியவற்றை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

அத்துடன், ஆதாரங்களை வெளியிட்ட இஸ்ரேல் பாதுகாப்புப் படை கூறுகையில், அந்த பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் எதையும் அந்தநேரத்தில் நிகழ்த்தவில்லை.

இஸ்ரேல் ராணுவ ட்ரோன்கள் எடுத்த சில வீடியோ காட்சிகள், தாக்குதல் அருகிலிருந்து நிகழ்த்தப்பட்டதை காட்டுகிறது எனவும் பயங்கரவாதிகள் சிலர் ராக்கெட்கள் தவறுதலாக அருகிலேயே விழுந்ததைக் குறித்து பேசிக்கொள்ளும் உரையாடல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிலையில், அவர் வெளியிட்டுள்ள உரையாடல்களில் ஒன்றில், ராக்கெட்கள் மருத்துவமனைக்குப் பின்னாலுள்ள கல்லறை



யில ... அ ... பக் ... தா ... வ ... க்கி ... பா

## 27 ஆம் திகதி
## உலக அமைதிக்கான பிரார்த்தனை நாள்

### போப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

காசாவில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றும் போர் எந்த பிரச்சினைக்கும் தீர்வாக அமையாது என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உலக அமைதிக்கான பிரார்த்தனை, தவம் மற்றும் நோன்பின் நாளாக அக்டோபர் 27ஆம் திகதியை அறிவிக்க முடிவு செய்துள்ளதாகவும், இந்த பிரார்த்தனையில் பங்கேற்கு மாறும் போப் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் பேரழிவை தவிர்க்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் என்றும் மோதல் விரிவடைவது கவலையளிக்கிறது.

இதேவேளை அமைதிக்கான முழக்கம் ஏழைகளிடமிருந்தும், மக்களிடமிருந்தும், குழந்தைகளிடமிருந்தும் கேட்கட்டும் என போப் பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## பாகிஸ்தானில் எரிபொருள் தட்டுப்பாடு
## 48 விமானங்கள் ரத்து

(இஸ்லாமாபாத்)

கடும் பொருளாதார நெருக்கடியினால் , பாகிஸ்தானில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதன் காரணமாக நேற்று 48 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தேசிய விமான நிறுவனமான பாகிஸ்தான் இன்டர் நேசனல் ஏர் லைன்ஸ், எரி பொருள் கிடைக்காததால் 48 உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களை இரத்து செய்துள்ளது.

அன்றாடம் விமானங்களுக்கான குறைந்த எரிபொருள் விநியோகம் மற்றும் செயற்பாட்டு சிக்கல்கள் காரணமாக விமானங்கள், இரத்து செய்யப்பட்டு உள்ள தாகவும், சில விமானங்கள் புறப்படும் நேரம் மாற்றிய மைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## காசாவுக்கு 100 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க முன்வந்த அமெரிக்கா

(ஜெருசலேம்)

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் தீவிரமடைந்து வரும் நிலையில் இஸ்ரேலுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கு சென்றிருந்தார்.

இதன்போது டெல் அவிவில் உள்ள பாதுகாப்பு அமைச்சக்த்தில் ஜோ பைடனும், பெஞ்சமின் நேதன்யாகுவுக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. பின்னர் இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் அவர் காசா மற்றும் மேற்கு கரையில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக 100 மில்லியன் டொலர் நிதியுதவியை அமெரிக்கா வழங்கும் என அறிவித்தார்.

குறித்த சந்திப்பின் போது ஜோ பைடன், " காசாவில் உள்ள வைத்தியசாலையில் மீது குண்டு வீசப்பட்ட சம்பவத்தை அறிந்து நான் மிகுந்த வருத்தமும் ஆத்திரமும் அடைந்தேன்.

நான் பார்த்தவற்றின் அடிப்படையில், இத் தாக்குதல் மற்ற குழுவினரால் நடத்தப்பட்டதாக தெரிகிறது, இத்தாக்குதலின் பின்புலத்தில் இஸ்ரேல் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், போர் நடந்து வரும் மிகவும் இக்கட்டான சூழலில், இஸ்ரேலுக்கு வந்து தனது ஆதரவை தெரிவித்ததற்கு ஜோ பைடனுக்கு பெஞ்சமின் நெதன்யாகு நன்றி தெரிவித்துள்ளார்.(நி-5-6)

## ஜேர்மனி
## தலம் மீத

(பேர்லின்)

ஜெர்மனி நாட்டின் பெர்லின் நகர் மையத்தில் உள்ள யூத வழிபாட்டு தலம் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற இந்த வழிப்பாட்டு தலம் சார்பில் பள்ளி.கல்லூரிகள், தங்கும் விடுதிகள் ஆகியவை அங்கு நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மர்ம நபர்கள் சிலர் நள்ளிரவில் வழிபாட்டு தலத்திற்குள் அத்துமீறி நுழைந்து வெடிக்கும் தன்மை உடைய வேதிப்பொருட்களை வீசி விட்டு தப்பியோடினர்.

தகவலறிந்து சம்பவ இட

## மருத்துவ உபகரணங்களுக்கு காசாவில் பாரிய தட்டுப்பாடு

### மயக்க மருந்து செலுத்தாது அறுவை சிகிச்சை

(காசா)

காசா மருத்துவமனை மீதான இஸ்ரேலின் கொடூரத் தாக்குதல் உலகை உலுக்கி உள்ள சூழலில், அங்கிருந்து வெளியாகும் செய்திகள் மேலும் பதைபதைப்பை கூட்டுகின்றன. அந்த வகையில் மயக்க மருந்து ஏற்றாது அறுவை சிகிச்சை செய்யப்படும் அவல நிலையில் மக்கள் உள்ளனர்.

தெற்கு காசாவின் அல் அஹ்லி மருத்துவமனை மீது குண்டு வீசப்பட்டதில் 500 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் குண்டு வீசாது என்ற நம்பிக்கையில் ஏராளமான பொதுமக்களும் அங்கே தஞ்சமடைந்ததில், பலியானோர் மற்றும் காயமடைந்தோர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.



தாக்குதலுக்கு உள்ளான மருத்துவமனையில் இருந்து, படுகாயத்துடன் உயிர் பிழைத்தவர்களை காப்பாற்றும் பணிகள் அருகிலுள்ள வேறு மருத்துவமனைகளில் முன்னெடுத்து வருகின்றன. ஆனால் படுக்கைகள் இல் லாதது, மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## மீதான தாக்குதல்; ...பிட்டது இஸ்ரேல்

த
வ.

ான்
ட்சி
ந்து
றது
கள்
ாக
தக்
நம்
செய்
வித்
வர்
யா
கெ
குப்
றை



யிலிருந்து ஏவப்பட்டதாகவும், அவை தவறுதலாக தங்கள் பக்கத்திலேயே விழுந்து விட்ட தாகவும் இருவர் பேசிக்கொள் வதை கேட்க கூடியவாறு இரு க்கின்றதாக கூறப்படுகிறது.

மேலும், காசாவிலிருந்து பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் என்னும் அமைப்பு இஸ்ரேல் மீது வீசிய ராக்கெட் தவறுதலாக அந்த மருத்து வமனை மீது விழுந்தமை யால், பாலஸ்தீன் அதிகாரிகள் இஸ்ரேல் மீது பழிபோட்டு விட்டார்கள் எனவும் குறிப்பிட்டு ள்ளார். (நி-5-6)

## சொந்த நாட்டிலே அகதிகளாகும் அவலத்தில் காசா மக்கள்



(காசா)

ஒரு நாட்டின் மக்கள் அவர்களது சொந்த நாட்டி லேயே அகதிகளாக்கப்படு வது கண் முன்னே காசா வில் நிகழ்ந்து வருகிறது.

இஸ்ரேல் - பாலஸ்தீன போர் தொடர்ந்து வருகின் றது. இஸ்ரேலின் தொடர் தாக்குதலால் உயிரிழந் தோரின் எண்ணிக்கை 3,500 ஐ கடந்துள்ளது என காசாவின் சுகாதார அமை ச்சு தெரிவித்துள்ளது. 12,000 இற்கு அதிகமா னோர் காயமடைந்துள் ளனர்.

மேலும், 1300 இற்கும் அதிகமானோர் கட்டட இடி பாடுகளுக்கு இடையே சிக் கிக் கொண்டிருக்கிறார்கள் என தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் மத்திய காசா பகுதியில் இருந்து மக்களை இடம்பெயர வேண்டும் என இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை விடுத்தது. அதன் விளை வாக இலட்சக்கணக்கான மக்கள் தெற்கு காசாவுக்கு இடம் பெயர்ந்தனர்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் தெற்கு பகுதியில் கான் யூனிஸ் மற்றும் ராஃபா பகுதிகளில் நடந்த வான் வழி தாக்குதலில் 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இட நெருக்கடி, தண் ணீர், உணவு பற்றாக் குறை ஆகியவை நிலவி வருவதால் சூழல் மோச மடைந்து வருகிறது.

எங்கு சென்றாலும் இது தான் கதி என்றால் நாங்கள் வீட்டிலேயே கண்ணியமாக இறந்து போகிறோம் என இடம்பெயர்ந்தோர் மீண் டும் வீடு திரும்ப முடிவெடு த்துள்ளனர். (நி-5-6)

## ...மனியில் யூத வழிபாட்டு ... மீது திடீர் தாக்குதல்

ஒன் பெர்
யத்தில்
ழிபாட்டு
ாக்குதல்
இந்த
சார்பில்
தங்கும்
கியவை
கப்பட்டு
ல் மர்ம
ளிரவில்
திற்குள்
ந்து வெடி
உடைய
ளை வீசி
ர்.
ம்பவ இட



த்திற்கு விரைந்து சென்ற பொலிஸார், யூத வழிபாட்டு தலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் தப்பி யோடிய மர்மநபர்களை வலைவீசி தேடி வருகிறா ர்கள்.

இந்நிலையில் ஜேர் மனி பிரதமர் ஓலாப் ஸ்கோ ல்ஸ் இந்த தாக்குதலை கடுமையாக கண்டித்துள் ளார். மேலும் இந்த சம் பவம் காரணமாக வழி பாட்டு தலத்தை சுற்றி வசி த்து வருபவர்கள் அச்சத்தில் உள்ளனர்.(நி-5-6ஸ்ரீ)

## போர் நெருக்கடிக்குள் இஸ்ரேல் செல்லும் ரிஷி சுனக்

(லண்டன்)

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், இஸ்ரேல் செல்ல விருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமினுடன் மேற்கொள்ளப்படும் சந்தி ப்பில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கும் இடை யில் ஏற்பட்டுள்ள போர் நெருக்கடியை குறைக்க ஆலோசனைகள் முன்னெ டுக்கப்படலாம் என எதிர்பார் க்கப்படுகிறது.

மேலும், காசா பகுதி க்கான போக்குவரத்தை உருவாக்க அழுத்தம் அளிக் கவும், அதனூடாக மனிதா பிமான உதவிகள் முன்னெ டுக்கவும் வாய்ப்பாக அமை யும் என ரிஷி சுனக் நம்பு வதாக கூறியுள்ளார்.

அத்தோடு, இந்த சந்திப் பை காசா பகுதிக்குள் சிக்கி யுள்ளவர்களையும் மீட்கும் வாய்ப்பாக பயன்படுத்த ரிஷி சுனக் முடிவு செய்துள்ளார்.


அதேவேளை, விவ காரம் தொடர்பில் பிராந்தி யத்தில் உள்ள பல தலை வர்களை சந்திக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அதேவேளை, பிராந்தி யத்தில் உள்ள செல்வாக்கு மிக்க நாடுகளின் தலை வர்களை சந்திக்க இருப்ப தாகவும்,காசாவுக்குள் மனி தாபிமான நடவடிக்கை களை எளிதாக்கவும் பணய க்கைதிகளை விடுவிக்க ஒன்றிணைந்து செயற்பட வும் இந்த சந்திப்புகள் உத வும்.

இந்நிலையில், முன்



னதாக அமெரிக்க ஜனா திபதி ஜோ பைடன் தெரி விக்கையில், ரஃபா எல்லைக் கடவைத் திறக்க எகிப்திய தலைவர் அப்தெல் ஃபத்தாஹ் எல்-சிசி ஒப்புக் கொண்டதாகவும், இதனால் 20 லொறிகள் மனிதாபி மான உதவிகள் காசா பகு திக்கு அனுப்பி வைக்க ப்படும் என கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



ரில் முன்
ா. ஆனால்
லாதது.
மருத்துவ
ளின்

தட்டுப்பாடு காரண மாக காயமடைந்தவர் களை காப்பாற்றும் பணிகள் சவாலாகி வருகின்றன.

இதனால் தரையில் நோயாளிகள் கிடத்தப்பட்டு அறுவை சிகிச்சைகள் நட த்தப்படுவதாகவும், மயக்க மருந்து தட்டுப்பாடு காரண மாக அவை இன்றியே அறுவை சிகிச்சைகளை நடத்தியதாகவும் பாலஸ் தீன மருத்துவர் ஒருவரது முகபுத்தகப் பதிவு விவரி க்கிறது. காசா மருத்துவ மனை துயரம் காரணமாக ஏவுகணைத் தாக்குதலுக்கு இடைவேளைவிட்டிருந்த ஹமாஸ் போராளிகள், ஜோ பைடன் வருகை காரண மாக தங்களது 12 மணி நேர அமைதியை முறித்துக் கொண்டு அங்கே ரொக் கெட்டுகளை வீச ஆரம்பி த்தனர்.

பதிலுக்கு இஸ்ரேலும், பாதுகாக்கப்பட்ட பகுதி என்று பொதுமக்கள் தஞ்சமடைந்த தெற்கு காசாவை குறி வைத்து தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## முகப்புத்தகத்தில் பதிவிடும் கருத்துக்களை கட்டுப்படுத்த மெட்ரோ நடவடிக்கை

(வோஷிங்டன்)

சமூக ஊடகத் தளமான முகப்புத்தகத்தில் இஸ்ரே லுக்கும் பாலஸ்தீனுக்கும் இடையிலான மோதல் குறி த்த பதிவுகளுக்கு தேவை யற்ற கருத்துக்கள் பதிவிடு வதை கட்டுப்படுத்த தற்கா லிக நடவடிக்கையை மெட்ரோ நிறுவனம் அறி முகப்படுத்தியுள்ளது.

அதன்படி, கருத்துக்களை பதிவிடுவதற்கு வழங்கப் பட்டுள்ள வழமையான அமைப்புகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

குறித்த மாற்றத்தின்படி, முகப்புத்தகத்தில் யாரேனும் பதிவிடும் பதிவுகளுக்கு கருத்துத் தெரிவிக்க அவர் களின் நண்பர்கள் மற்றும் பின்தொடர்பவர்கள் மட் டுமே அனுமதிக்கப்படுவர் கள்.

மேற்படி, மாற்றத்தி லிருந்து பயனர்கள் எந்த நேரத்திலும் விலகுவதோடு, அமைப்புகளை மாற்றலாம் என்று மெட்ரோ தெரிவித்து ள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பல்கலைக்கழகங்களை அரசாங்கம் தரப்படுத்த வேண்டும்

## நீதி அமைச்சர் விஜேதாஸ



(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள 24 தனியார் பல்கலைக் கழ கங்களின் தரநிலைகள் தொடர் பில் எவ்வித தகவல்களும் இல்லாமையால் அவற்றை ஒழுங்குப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள் ளதாக நீதி அமைச்சர் விஜே தாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ் மன் கிரியெல்ல எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

எமது நாட்டில் மூடிய பொரு ளாதாரம் காணப்பட்ட சூழலில் தனியார் பல்கலைக்கழகங்கள் இருக்கவில்லை. அவற்றுக்கு அனுமதியும் வழங்கவில்லை.

1977ஆம் ஆண்டுக்கு பின் னர் நாட்டில் திறந்த பொரு ளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பல்கலைக்கழக சட்ட ங்களில் திருத்தங்கள் மேற் கொள்ளப்படாவிடினும் தனி யார் பல்கலைக்கழகங்களுக் கான தேவை எழுந்தது.

இதன் காரணமாக பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சட்டத்தில் திரு த்தங்களை கொண்டுவந்து தனியார் பல்கலைக்கழகங் களை உருவாக்குவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

அதன் பிரகாரம் உயர்கல்வி அமைச்சில் 24 தனியார் பல் கலைக்கழகங்கள் பதிவுசெய் யப்பட்டுள்ளன. இதற்கு அப்பால் பல வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பீடங்கள் இங்கு உள்ளன.

அவற்றுக்கு கீழ் இயங்கும் பிரிவுகளின் தரங்கள் எமக்கு தெரியாது. அவை எங்கு உள் ள என்றும் தெரியாது. அங்கு கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் என்னவென்றும் தெரியாது. அரசாங்கம் அவற்றை தர நிலைப்படுத்தவில்லை.

ஆகவே, உயர் தரத்திலான கல்வியை வழங்கக்கூடிய சட்ட ங்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள் ளது. பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு காலங்கட ந்த ஒன்றாக உள்ளதால் புதிய சிறப்பு குழுவொன்றை அல்லது கட்டமைப் பொன்றை உரு வாக்கி அரச மற்றும் தனியார் கல்வியை கொண்டுசெல்ல வேண்டியுள்ளது என தெரிவித் தார். (நி-5-6)

# பொலிஸ் எனத் தெரிவித்து கொள்ளையிட்ட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் பொலிஸார் என தங்களை அறிமுகப்படுத்தி, புடவைக்கடை ஒன்றில், 23 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்ற குற் றச்சாட்டில் இருவர் கைது செய் யப்பட்டுள்ளதுடன் சம்பவத்து டன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகி யுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கந்தர்மடம் பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் நேற்று முன்தினம் மாலை சென்ற நால்வர் தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தி குறித்த கடையில் போதை மாத்தி ரைகள் விற்பனை செய்யப்படுகி ன்றது என்று தகவல் கிடை த்துள்ளது என்றும் தேடுதல் நடத்த வேண்டும் என்றும் கூறி, கடைக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு தேடுதல் நடத்தியுள்ளனர்.

அதன்போது, கடையில் இருந்த 23 ஆயிரம் ரூபா பண த்தை எடுத்துக் கொண்டு, கடையிலிருந்தவர்களை மிர ட்டி விட்டுச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் நேற்று வியாழக்கிழமை இரு வரைக் கைது செய்துள்ள னர். (நி-5-6-33)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஆலய நூதன திரிதள இராஜகோபுர கும் பாபிஷேகம் இன்று வெள் ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள் ளது. (நி-5-6)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## மிதுனம்

**தடைக்கற்களை படிக் கற்களாக மாற்ற வழி சொல்லும் மிதுன இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆரா ய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்க த்தில் உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சனி சஞ்சரிக்கின்றார். அவர் வக்கிர நிவர்த்தியான பின்னால் அஷ்டமஸ்தா னம் வலுவடைகின்றது. எனவே எதை யும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் விரயங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லையாலும் அவதி, அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் குழப்பம் உருவாகும். சேமிப்புகள் கரை ந்து மனதை வாட வைக்கும்.

### சனி வக்கிர நிவர்த்தி!

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியா கின்றார். அஷ்டமத்துச் சனி வக்கிர நிவர்த் தியாகி வலுப்பெறுவதால் மிகுந்த கவ னத்தோடு செயற்பட வேண்டும். "அகப் பட்டவனுக்கு அஷ்டமத்துச் சனி" என்பது பழமொழி. எனவே எந்த வழிகளிலும் சிக்கல்களும் சிரமங்களும் வரலாம். முன்னெச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. குடும்ப ஒற்றுமை குறையும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது. கூட்டாளிகள் உங்களை விட்டு விலகலாம். குடியிருக்கும் வீட்டாலும் பிரச்சினை, கொடுக்கல்-வாங்கல்களி லும் பிரச்சினை என்ற நிலை உருவா கும். உற்றார், உறவினர்களிடம் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். ஊர் மாற்றம், இட மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். யோக பலம் பெற்ற நாளில் சனிக்குரிய வழி பாடுகளை மேற்கொள்வது உகந்தது.

### குரு வக்கிரம்!

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றி ருக்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் அடைவது நன்மை தான். கல்யாண முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். புதிய ஒப்பந்தங் கள் கிடைக்கும். வெளிநாட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் வரலாம்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்!

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதி சுக்கிரன் நீச்சம் பெறுவது யோகம் தான். ஆனால் 5 ஆம் இடத்திற்கும் அதிபதியாக சுக்கிரன் விளங்குவதால் பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாக லாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் வர லாம். வம்பு வழக்குகள் வீடு தேடிவரும். தெம்பும், உற்சாகமும் குறையும். திடீர், திடீர் என வரும் விரயங்கள் மனதை வாடவைக்கும். செய்யும் முயற்சிகளில் பலன் கிடைப்பது அரிது.

### விருச்சிக புதன்!

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசி க்கு புதன் வருகின்றார். இக்காலம் உங்க ளுக்கு ஓர் இனிய காலமாகும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக் கும். உங்கள் திறமைக்கு வெற்றி உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங் கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்வர். பாரா ட்டும், புகழும் கூடும். பல நாட்களாக நடை பெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். நண்பர்கள் நல்ல தகவ லைக் கொண்டுவந்து சேர்ப்பர். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு இடையூறு சக்திகள் அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு குறுக்கீடுகளும் நெருக்கடி நிலையும் ஏற்படும். உத்தியோக த்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிக ளின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் சக கலைஞர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. மாணவ-மாண வியர்களுக்கு மறதி அதிகரிக்கும். பெண்க ளுக்கு குடும்பச்சுமை கூடும். விரயங்கள் உண்டு. விட்டு[illegible] [illegible]

## கடகம்

**பொதுவாழ்வில் புகழ் குவிக்கும் கடக இராசி வாச கர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆரா ய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக் கத்தில் சப்தம ஸ்தானத்தில் சனி பக வான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். கண்டகச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது இருக்கின்றது. சனி பகவான் இம்மாதம் வக்கிர நிவர்த்தியான பிறகு அதன் கடுமை கொஞ்சம் அதிகரிக்கின்றது. ஆரோக் கியத் தொல்லை, அருகில் இருப்பவர் களால் தொல்லை, வருமானப்பற்றாக் குறை போன்றவைகள் வரலாம். எதை யும் நினைத்த நேரத்தில் செய்ய இயலாது.

### சனி வக்கிர நிவர்த்தி!

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியா கின்றார். சனி உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் வலிமை அடைவதால் ஆரோக்கி யத் தொல்லைகள் அதிகரிக்கும். மருத் துவச் செலவுகளும் ஏற்பட்டு மனக்கலக் கத்தை உருவாக்கும். வெளிநாடு சென்று பணிபுரிய விரும்பியவர்களுக்கு அங்கு வேலை கிடைக்காமல் தத்தளிக்க நேரி டும். குடும்பப் பிரச்சினை கொடிகட்டிப் பறக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். பெற்றோர்கள் மற்றும் தாத்தா-பாட்டிகளின் உடல்நலம் பாதிக் கப்படலாம். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். நீங்கள் கேட்காமலேயே வேறு இடத்திற்கு மாற்றம் செய்வர்.

### குரு வக்கிரம்!

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறுவது ஒருவழிக்கு நன்மை தான். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் சில இடையூறு சக்திகளும் வந்து அலை மோதும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழலும் உருவாகும். கவலை என்ற மூன்றெழுத்து அகல கடவுள் வழிபாடு தேவை.

### நீச்சம் பெறும் சுக்கிரன்!

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். அசுர குரு நீச்சம் பெறுவது யோகம் தான். இடம், பூமி வாங்குவது, மனை கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர் கள். பெண் வழிப் பிரச்சினைகள் அக லும். பெரிய மனிதர்களின் ஒத்துழைப் பால் அரிய பல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பதிலும் கவனம் செலுத்துவீர்கள்.

### விருச்சிக புதன்!

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசி க்கு புதன் வருகின்றார். உங்கள் இராசி க்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியா னவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தி ற்கு வரும் பொழுது பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுகள் முடிவிற்கு வரும். குழந்தைகளின் மேல்படிப்பு தொடர்பாக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். உத்தியோக மாற்றங்க ளும் தொழில் மாற்றங்களும் உங்கள் மனதிற்கு பிடித்த விதம் அமையும். கடன் சுமை படிப்படியாகக் குறையும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு தடை களும் தாமதங்களும் அதிகரிக்கும். வியா பாரம், தொழில் செய்பவர்களுக்கு மறை முக எதிர்ப்புகள் காணப்படும். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதி காரிகளால் பிரச்சினை தலைதூக்கும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கைநழு விச் செல்லலாம். மாணவ-மாணவியர்க ளுக்கு படிப்பில் கவனம் தேவை. பெண்க ளுக்கு பிரச்சினைகள் அதிகரிக்கும். குடும்பத் தகவல்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான நிலையத்திற்கு எதிராக வீதிமறியல் போராட்டம் முன்னெடுப்பு

(முறிகண்டி)

**அனுமதிக்கப்பட்ட மதுபான நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**




கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக யாழ்ப்பாணம்-மன்னார் பிரதான வீதியை மறித்து முக்கிய சேவை நிலையங்கள் உள்ள பகுதியில் அனுமதிக்கப்பட்ட குறித்த மதுபான நிலையத்தின் அனுமதியை இரத்து செய்யக் கோரியே நேற்றுக் காலை இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு விடயங்கள் உள்ளங்கிய பதாதைகளை ஏந்தியவாறும் சென்று பிரதேச செயலக முன்றலில் கவனயீர்ப்பில் ஈடுபட்டதுடன் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதேவேளை அவ்வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டு இருந்த நிலையில் பொலிஸார் வருகைதந்து கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி போக்குவரத்தினை சீர் செய்து வைத்தனர். (நி-5-6-100-316)

# முல்லை கர்நாட்டுக்கேணி பகுதிகளில் யானைகள் புகுந்து அடாவடி



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் வடக்கு, கர்நாட்டுக்கேணி பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தால் தென்னந்தோட்டம் நாசமாகியுள்ளது.

அண்மையில் கிராமங்களுக்குள் புகுந்த யானைகள் அப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்திற்குள் கூட்டமாக சென்று தென்னை மரங்களை நாசமாக்கியுள்ளது. குறித்த யானைகளின் அட்டகாசத்தால் தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளதுடன், தென்னந்தோட்ட செய்கையில் ஈடுபட்டவர்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் இந்த பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் கிட்டத்தட்ட 1600 இற்கும் மேற்பட்ட தென்னம்பிள்ளைகள் அழிவடைந்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

யானைகளினால் ஏற்படும் பிரச்சினைக்கு தீர்வு காண உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-299)

# வேரவில் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வசதியில்லை

## பிரதேச மக்கள் முறைப்பாடு

(முறிகண்டி)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேரவில் மருத்துவமனைக்கான நோயாளர் காவுவண்டி ஒன்றினை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்-மன்னார் பிரதான வீதியிலிருந்து சுமார் 18 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது வேரவில் பிரதேசமாகும். மக்களின் மருத்துவ தேவைகளை நீண்ட ஆண்டுகளாக முன்னெடுக்கும் குறித்த மருத்துவமனைக்கு கடந்த 3 வருடங்களாக நோயாளர் காவு வண்டி இல்லாதமையால் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர்கள் குறித்த மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றினை ஏற்படுத்த வழியமைக்குமாறு அப்பகுதிமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் வேரவில் பகுதியில் விபத்துக்குள்ளானவரை அழைத்துச் செல்வதற்கான வாகன வசதி இல்லாததால் மருத்துமனைக்கு கொண்டு செல்லும் போது இடைநடுவே உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை உயர்பட்டப்படிப்புகள் பீடம்

**புதிய அனுமதி**

**பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies – MCST) 2023/24 (அணி V)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் கலைமாணிப் பட்டம்
- தொழில்முறை அனுபவம் மற்றும் ஈடுபாட்டுடன் வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடம் மற்றும் மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் சமனான தகுதிகள்.

**தெரிவுமுறைமை:-**

➢ நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்** : ஒருவருடம்
**மொழி மூலம்** : தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம்** : **135,000/-** (5000/- மீள அளிக்கப்படும்)
**விண்ணப்பப் படிவக் கட்டணம்** : **1,000/-**
**விண்ணப்ப முடிவுத்திகதி** : **10.11.2023**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **(19005255000213 4)** எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான **ரூபா 1000/-** கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் மக்கள் வங்கியில் **(19005255000213 4)** எனும் கணக்கிலக்கத்திற்கு **ரூபா 1000/-** செலுத்திய பற்றுச்சீட்டைஇணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **10.11.2023** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.** (C-7453)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 300 |
| தக்காளி | 250 | 300 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 150 | 150 |
| கோவா | 180 | 160 | 150 | 200 |
| கரட் | 260 | 240 | 280 | 300 |
| பூசணி | 80 | 80 | 70 | 100 |
| புடோல் | 100 | 250 | 120 | 240 |
| வாழைக்காய் | 200 | 200 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 220 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 260 | 350 | 250 | 300 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 120 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| பயற்றங்காய் | 300 | 350 | 250 | 400 |
| லீக்ஸ் | 160 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 140 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 160 | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 313





இருவரும் இல்லாத சமயத்தில் அவருக்கு எதாவது நேர்ந்துவிட்டால் மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துவிடுவது எளிதாயிருக்கும் அல்லவா? இதற்காக என்ன செய்தாலும் செய்வார்கள்! அவர்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும் அந்த ராட்சஸி நந்தினி சொல்லிக் கொடுப்பாள். அவர்கள் தயங்கினாலும் இவள் துணிவூட்டுவாள். ஆகையால் தஞ்சாவூரில் நம் தந்தையின் அருகில் நாம் இனி இருப்பதே நல்லது. சூழ்ச்சியும் சதியும் எதுவரைக்கும் போகின்றன என்று கவனித்துக் கொண்டு வரலாம். அதோடு நம் அருமைத் தந்தைக்கும் ஆபத்து ஒன்றும் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

சாதுவாகிய மதுராந்தகனை ஏன் இவர்கள் சிம்மாசனத்தில் ஏற்றப் பார்க்கிறார்கள்? தர்ம நியாய முறைக்காகவா? இல்லவே இல்லை. மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டினால் அவனைப் பொம்மையாக வைத்துக்கொண்டு தங்கள் இஷ்டம் போல் எல்லாக் காரியங்களையும் நடத்திக் கொள்ளலாம் என்பதற்காகத்தான். அப்புறம் நந்தினி வைத்ததுதான் சோழ சாம்ராஜ்யத்தில் சட்டமாகிவிடும்! அவளுடைய அதிகாரத்துக்குப் பயந்துதான் மற்றவர்கள் வாழ வேண்டும். அவளிடம் மற்ற அரண்மனை மாதர் கைகட்டி நிற்கவேண்டும். சீச்சீ! அத்தகைய நிலைமைக்கு இடம் கொடுக்க முடியுமா? நான் ஒருத்தி இருக்கும் வரையில் அது நடவாது. பார்க்கலாம் அவளுடைய சமார்த்தியத்தை!

தஞ்சாவூரில் இருப்பது தனக்குப் பல வகையில் சிரமமாகவே இருக்கும். தாயும், தந்தையும், "இங்கு எதற்காக வந்தாய், பழையாறையில் சுகமாக இருப்பதை விட்டு?" என்று கேட்பார்கள். 'சுயேச்சை என்பதே இல்லாமற் போய்விடும். தன்னுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சை யாரேனும் எடுப்பார்கள். அதைக் கேட்கவே தனக்குப் பிடிக்காது. நந்தினியைச் சில சமயம் பார்க்கும் படியாக இருக்கும். அவளுடைய அதிகாரச் செருக்கைத் தன்னால் சகிக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் இந்தச் சமயத்தில் பார்த்தால் சரிப்படுமா? இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. தந்தையின் உயிருக்கு அபாயம் நேரலாம் என்ற பயமும் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் இருக்க வேண்டிய இடம் தஞ்சையேயல்லவா?'

இவ்வளவையும் தவிர, வேறொரு, முக்கிய காரணமும் இருந்தது. அது வந்தியத்தேவனைப் பற்றி ஏதேனும் செய்தி உண்டா என்று தெரிந்துகொள்ளும் ஆசைதான். வந்தியத்தேவன் கோடிக்கரைப் பக்கம் போயிருக்கிறான் என்று தெரிந்து அவனைப் பிடித்து வரப் பழுவேட்டரையர்கள் ஆட்கள் அனுப்பியிருப்பதைப்பற்றி இளைய பிராட்டி கேள்விப்பட்டாள். 'புத்தி யுத்திகளில் தேர்ந்த அந்த இளைஞன் இவர்களிடம் அகப்பட்டுக் கொள்வானா? ஒருவேளை அகப்பட்டால் தஞ்சாவூருக்குத்தான் கொண்டு வருவார்கள். அச்சமயம் நாம் அங்கே இருப்பது மிகவும் அவசியமல்லவா? ஆதித்த கரிகாலன் அனுப்பிய தூதனை அவர்கள் அவ்வளவு எளிதில் ஒன்றும் செய்து விடமுடியாது. ஏதாவது குற்றம் சாட்டித்தான் தண்டிக்க வேண்டும் அதற்காகவே சம்புவரையர் மகனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அது பொய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பொய் என்பதை நிரூபிக்க வேண்டும். கந்தன் மாறனுடன் பேசி அவனுடைய வாய்ப் பொறுப்பை அறிந்து கொள்வது அதற்கு உபயோகமாயிருக்கலாம்.'

இவ்விதமெல்லாம் குந்தவையின் உள்ளம் பெரிய பெரிய சூழ்ச்சிகளிலும் சிக்கலான விவகாரங்களிலும் சஞ்சரித்துக் குழம்பிக் கொண்டிருக்கையில், அவளுடன் யானைமீது வந்த அவள் தோழி வானதியின் உள்ளம், பால் போன்ற தூய்மையுடனும், பளிங்கு போன்ற தெளிவுடனும் ஒரே விஷயத்தைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு விஷயம் இளவரசர் அருள்மொழிவர்மர் எப்போது இலங்கையிலிருந்து திரும்பி வருவார் என்பது பற்றித்தான்.

"அக்கா! அவரை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா? வந்தால், எவ்விடம் வருவார்? பழையாறைக்கா? தஞ்சாவூருக்கா?" என்று வானதி கேட்டாள்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### வாழ்வில் உயர்ந்திட

சின்னஞ் சிறிய பிள்ளைகளே
சிந்தனைக்குரிய செல்வங்களே
என்றும் உண்மை கூறுங்கள்
எண்ணம் இனிக்க வாழுங்கள்

ஒழுக்கம் உயிரினும் மேலாக
உயர்த்தி வாழ முனையுங்கள்
அழுக்குப் பாதை நீக்கிடவே
அலைந்து அறிவைத் தேடுங்கள்

பெற்றோர் சொல்லைப் பேணுங்கள்
பெரியோர் கூற்றை மதியுங்கள்
கற்றோர் வழியைத் தொடர்ந்திடவே
கனிவாய் சிந்தை செய்யுங்கள்.

அறிவைக் கூறும் ஆசானை
அன்பாய் மதித்து நடவுங்கள்
செறிவாய் வாழ்வில் உயர்ந்திடவே
செயலில் பண்பைப் பேணுங்கள்

பூ.நிமலராஜி

### உயிரெழுத்து உண்மைகள்

அன்பும் தெய்வமும் அறிந்திடு
ஆசைகள் குறைத்து வாழ்திடு
இனிய வார்த்தைகள் பேசிடு
ஈகை எண்ணம் பேசிடு
உயிரெனக்கல்வி கற்றிடு
ஊருக்கு நன்மை செய்திடு
எறும்பு போல உழைத்திடு
ஏற்றம் வாழ்வில் பெற்றிடு
ஐயம் இன்றி பேசிடு
ஒற்றுமை மேலெனச் சேர்ந்திரு
ஓடும் காலத்தை மதித்திடு
ஔவை மொழிந்தவை நினைத்திடு

க.துசானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.
– சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவில் விவசாயிகள் நடத்திய போராட்டத்தைப் போல...

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய விவசாயிகள் பெரும் போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் திரண்டெழுந்த விவசாயிகள் புதுடில்லிக்குச் சென்று அங்கு பெரும் போராட்டத்தை நடத்தினர்.

ஒரு கட்டத்தில் கவசணத்தோடு விவசாயிகள் போராட்டம் நடத்தியபோது, இந்திய மத்திய அரசு இஃதென்ன கரைச்சல் என்று நினைக்குமளவுக்கு நிலைமை இருந்தது.

இதுதவிர உழவு இயந்திரங்களில் பயணித்தவாறும் விவசாயிகள் நடத்திய போராட்டம் இனிமேல் விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய எந்தத் திட்டத்தையும் சட்டத்தையும் கொண்டு வருவதில்லை என்ற தீர்மானத்துக்கு மத்திய அரசைக் கொண்டு வந்தது.

இதுதவிர இந்திய வரலாற்றில் மிக நீண்ட காலம் நடைபெற்ற போராட்டமாக குறித்த விவசாயிகளின் போராட்டம் பதிவாகியது.

இவ்வாறு விவசாயிகள் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் போராட்டம் நடத்தியதன் காரணமாக மத்திய அரசு திணறுகின்ற அளவுக்கு நிலைமை உருவாகியது.

இதை நாம் கூறும்போது, அது சரி எதற்காக இப்போது இந்திய விவசாயிகள் நடத்திய போராட்டத்தைப் பிரஸ்தாபிக்கிறீர்கள் என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் காலத்துக்குக் காலம் போராட்டம் நடத்துகின்ற நம் தமிழ் அரசியல் தரப்புகள் தாம் நடத்துகின்ற போராட்டங்கள் தொடர்பில் சரியான மதிப்பீட்டைச்செய்ய வேண்டும்.

அதாவது பேரினவாத ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தமிழ்த் தரப்புகள் இடையிடையே நடத்துகின்ற ஹர்த்தால் போராட்டங்கள்; ஆட்சியாளர்களுக்கு எந்தளவு தூரம் அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது, அந்தப் போராட்டத்தால் அரச தரப்புக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் எவை, இத்தகைய போராட்டங்கள் அரசாங்கத்துக்குக் கற்றுக் கொடுக்கின்ற பாடமென்ன? குறித்த கடையடைப்புப் போராட்டங்களால் தமிழ் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு, அந்தப் பாதிப்பின் எதிர்விளைவு, இத்தகைய போராட்டங்கள், தமிழ் மக்கள் மத்தியில் பெற்றுள்ள ஆதரவு என்பன குறித்து ஆய்வுகளைச் செய்ய வேண்டும்.

தேவையாயின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறை கூட இத்தகைய போராட்டம் தொடர்பிலான கள ஆய்வுகளை மேற்கொண்டு அதுபற்றிய கருத்துக்களை முன்மொழிவது பொருத்துடையது.

இவ்வாறான ஆய்வுகளைச் செய்யாதவிடத்து எதிர்காலத்தில் இத்தகைய போராட்டங்கள் பிசுபிசுக்கக்கூடிய வாய்ப்புகளும் ஏற்படலாம்.

எனவே நீதிக்காக நடத்தப்படுகின்ற போராட்டம் வெற்றி பெற வேண்டும். அதேநேரம் எதிர்காலத்தில் போராட்டங்களின் வடிவங்கள் மாற்றப்படுவது அவசியம் என்ற யதார்த்தத்தை தமிழ் அரசியல் தரப்புகள் உணர்ந்து கொள்வதுடன் இந்திய விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் இடம், பொருள், ஏவல் பற்றியும் சிந்திப்பது அவசியம்.

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்
# சவாலுக்குட்படுத்திய மனுக்களை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தால்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்களை விசாரணையின்றி நிறைவுறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என சபாநாயகர் அறிவித்துள்ளதால், குறித்த சட்டமூலத்தை நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என அறிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹரிணி அமரசூரிய, விஜித ஹேரத் உள்ளிட்டவர்களால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### ஜனாதிபதியின் ஆணையையே துச்சமென
# கருதும் பௌத்த மேலாதிக்கம்
### சி.வி விக்னேஸ்வரன் விசனம்

ஜனாதிபதியின் ஆணையினை மீறி கிழக்கில் முன்னாள் ஆளுநர் தலைமையில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளமை பௌத்த மேலாதிக்க நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் விசனம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியின் பேச்சை மீறி செயற்படும் தலைமைகளும், மக்களுமே கிழக்கில் உள்ளனர். எனவே ஜனாதிபதியின் பேச்சை மீறிய செயற்பாடுகளே அங்கு இடம்பெறுகின்றன.

தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருந்த போதிலும்கூட கிழக்கில் . முன்னாள் ஆளுநர் தலைமையில் புத்தர்சிலை வைக்கப் பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்தவேளை மயிலத்தமடுவில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடினேன்.

மட்டு.வில் தமிழ் மக்களின் கால்நடைகளை அழித்து, இடங்களை ஆக்கிரமித்து சிங்கள மயமாக்குகின்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடந்தேறி வருகின்றன.

இம் மக்களின் காணிகளை விடுவிக்குமாறும், அக்காணிகளை மீளவும் அம்மக்களிடம் ஒப்படைக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

ஆனால் தமிழ் மக்களின் வாடிகள் எரிக்கப்பட்டமை மாத்திரமல்லாமல், அங்கு தமிழ் மக்கள் போக முடியாதவாறு அச்சுறுத்தல்களும் விடுக்கப்படுகின்றன.

தற்போது கிழக்கில் திட்டமிட்ட செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.(ம-7)

# இலங்கை வங்கியில் நவராத்திரி விழா

இலங்கை வங்கியின் யாழ் அதிமேற்தரக் கிளையில் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் பிரதான முகாமையாளர் சிவஞான சுந்தரம் தலைமையில்இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் உலகின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்கள் சங்கமிக்கும் நாத சங்கமம் இசைக் கச்சேரி இடம்பெறும்.

மேலும் இலங்கை வங்கியின் ஊழியர்களும் புகழ்பூத்த கலை வித்தகர்களும் இணைந்து வழங்கும் நாட்டியரங்கம், இசையரங்கம் என்பன நடைபெறும்.

மேலும், "இன்றைய இளையோர் நெறிமாறிச் செல்வதற்கு காரணம்" எனும் தலைப்பில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களை நடுவராக கொண்டு பிரபல பட்டிமன்ற பேச்சாளர்கள் பங்கேற்கும் சிறப்பு பட்டிமன்றம் இடம்பெறும். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 08:30 மணியிலிருந்து மாலை 17:00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கச்சேரி, புதிய கச்சேரியின் முன்வளாகத்தடி, மஞ்சுளா வெதுப்பகம் சந்தி, திருநகர், வானவில் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுகந்த டெலிகாம், மலையாபுரத்திக்குளம், நெடுங்குளம், மகாறம்பைகுளம், அழகல்ல (தீருவேகம), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ் தலைமன்னார். தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லோர்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நடுக்குடா.பேசாலை – ஐஸ் தொழிற்சாலை **Grotto of lady lords church** பேசாலை, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீரியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு. பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார். தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு

# பாடசாலை மாணவரிடையே வேகமெடுக்கும் கண்நோய்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே கண் நோய்கள் வேகமாகப் பரவும் அபாயம் தொடர்வதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்திருந்தார். நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை முன்பள்ளி மற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இருப்பதன் மூலம் இந்நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என அவர் பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

இன்றைய நாட்களில் பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் பரவி வருகிறது. கண்கள் சிவத்தல், பார்வை மங்கல், கண்ணீர், காய்ச்சல், தலைவலி போன்ற அறிகுறிகளை நாம் காண்கிறோம். இது மிக விரைவாக பரவும் என்பதால் இதை வைரஸ் காய்ச்சலாக பார்க்கிறோம்.

குழந்தைகள் ஒன்றாக விளையாடுவதால், அவர்களுக்கு இடையே தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த அறிகுறிகளுடன், சில நேரங்களில் மேல் சுவாசக் குழாயில் அது இருமல்,சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகளும் வரலாம்.

அப்படி ஒரு நிலை இருந்தால், குழந்தையை பாடசாலைக்கு அனுப்பாதீர்கள். குழந்தைகளை பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கோ, முன்பள்ளிக்கோ அனுப்பாதீர்கள், மற்ற குழந்தைகளுக்கும் தொற்று ஏற்படலாம் என்றார். (ம-7)

# போதையில் சாரத்தியம் இ.போ.ச சாரதிக்கு மறியல்

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு சொந்தமான பேருந்தை குடிபோதையில் ஓட்டி சென்ற சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பேருந்து நிலையத்தில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணிகளுடன் சென்ற பேருந்தின் சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்திய நிலையில் மன்னார் போக்குவரத்து பொலிஸாரால் நேற்று முன் தினம் மாலை மன்னார் வைத்தியசாலை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமை உறுதி செய்யப்பட்ட நிலையில் சாரதியை நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த சாரதியை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

15

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



தென்னிந்தியாவில் பல ஊர்களுக்கு நல்லூர் என்று பெயருள்ளது. ஆகவே அத்தகைய ஒரு பெயர் பூநகரிலுள்ள இப் பிரதேசத்துக்குச் சோழரால் இடப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். முதலாம் பராந்தகன் ஆட்சியில் தான் தமிழ் நாட்டிலுள்ள சோழ மண்டலமும் மண்ணியாறும் இதன் தென்னெல்லையிலுள்ள நல்லூரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. பூநகரியில் இராசதானிக்குரிய கட்டட அழிபாடுகளின் தென்னெல்லையில் சோழ மண்டலமும், வடவெல்லையில் மண்ணியாறும் அதற்குச் சற்று வடக்காக நல்லூர் என்ற விடமும் காணப்படுகின்றன.

11 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து சோழரைத் துரத்தி விட்டு இலங்கை முழுவதற்கும் முதலாம் விஜயபாகு அரசனானான். அவன் ஆட்சிக்காலத்தில் வட இலங்கை அவன் ஆட்சியிலிருந்தது. முதலாம் விஜயபாகு இறந்த பின் கி.பி 1110 ஆம் ஆண்டளவில் குலோத்துங்கசோழன், சோழராட்சியை மீண்டும் நிலைநாட்ட இலங்கை மீது படையெடுத்தான். அப்படைக்குத் தலைமை தாங்கி வந்தவன் கருணாகரத் தொண்டைமான் எனும் தளபதியாவான்.

அவன் உத்தர தேசத்தைச் சில காலம் நிர்வகித்தாரென நம்ப இடமுள்ளது. தொண்டைமானாற்றைத் துறை முகமாக்கினான். தொண்டைமானாற்றில் விளைந்த தன் படுவான் உப்பை சோழ நாட்டுக்கு கப்பல் மூலம் ஏற்றுவித்தான். உரும்பிராயிலுள்ள் கருணாகரப்பிள்ளையார் கோயிலை இவனே அமைப்பித்தான் என்றும் சொல்வப்படுகிறது.

12 ஆம் நூற்றாண்டில் உத்தர தேச அரசு தென்னிலங்கை ஆட்சியாளரின் ஆதிக்கத்தினுள் மீண்டும் உட்பட்டது. அவ்வேளை முதலாம் பராக்கிரமபாகு இலங்கையின் மன்னனாக இருந்தான். இதற்கு ஆதாரமாக நயினாதீவில் அகப்பட்ட கல்வெட்டொன்றும் தென்னிந்தியாவில் திருவாலங்காட்டிலே அகப்பட்ட கல்வெட்டொன்றும் ஆதாரமாகவுள்ளன. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சிங்கை நகர் வட இலங்கையின் தலை நகராக விளங்கியது.

இக் காலத்தில் இலங்கையில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அக் காலத்தில் பாண்டிய மன்னன் (ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்) தன் மந்திரியும் படைத் தளபதியுமான ஆரியச்சக்கிரவர்த்தி என்பவனின் தலைமையில் தமிழர் சேனை ஒன்றினை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அவன் பெயருக்கு ஏற்ப இனத்தால் ஆரியனல்லன். அவன் உத்தரதேசத்தைக் கைப்பற்றி பாண்டி மழவன் என்ற ஒரு பிரதிநிதியிடம் கையளித்துவிட்டு, தென்னிலங்கைக்குள் நுழைந்தான். உத்தரதேசத்தின் தொடர் வரலாற்றில் 13 ஆம் நூற்றாண்டு மிக முக்கியமான காலகட்டமாகும். சுதந்திரத் தமிழ் இராச்சியம் நிறுவப்பட்டு நிலை கொண்ட கால மிதுவென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். இவ்வாறு இலங்கைச் சுருக்க வரலாறு என்னும் நூலில் சரித்திர காலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப் பற்றி குறிப்பிட்டு தொடர்கிறது.

சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப் பற்றி "இலங்கைச் சரித்திரம்" என்னும் நூலிலிருந்து......

இலங்கைச் சுருக்க வரலாறு நூலில் இலங்கையின் வட பிரதேசம் யாழ்ப்பாண இராச்சியமென 13 ஆம் நூற்றாண்டிலேயே அழைக்கப் படலாயிற்று என்று கூறும் போது, 1930 இல் T.A. இராஜருத்னம் பிள்ளை என்வரால் எழுதப்பட்ட "இலங்கைச் சரித்திரம்" என்னும் நூலில் இலங்கையின் வட பகுதியிலிருந்த தமிழ் இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என்று கி.மு 2ஆம் நூற்றாண்டில் இருந்து அழைக்கப்படுவதாகவும் அதற்கு யாழ் பாடியின் கதையை கூறுகிறார்.

வலகம்பாகு அரசனின் காலத்தில் சில தமிழரசர் தென்னிந்தியாவிலிருந்து வந்து அவனை இராச்சியத்திலிருந்து அகற்றி விட்டு, ஒருவர் பின்னொருவராய் இலங்கையில் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார்களென்று முன்னைய கட்டுரையில் பார்த்தோம். அவர்களிலொருவன்? அனுராதபுரத்திலிருந்து இராச்சியத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது தென்னிந்தியாவிலிருந்து, பாணர் குலத்தைச் சேர்ந்தவனும், யாழ் வாத்தியத்தை வாசிப்பதில் மிகவும் வல்லவனுமான சங்கீத வித்துவான் ஒருவன் இலங்கைக்கு வந்து, அரசனைக் காண விரும்புவதாகக் கூறினான்.

அரசன் குருடனை காண்பது அபசகுணம் எனக் கருதி, அரசனுடைய ஏவலாளர் இராஜாவை தரிசிக்க அவனுக்கு உத்தரவு கொடாது மறுத்தனர். ஆயினும் சங்கீத வித்துவான் தன்னப்பற்றிக் கூறிய வரலாறு மிகவும் ஆச்சரியமாயிருந்தமையால், அவர்கள் அவனுடைய வரவை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன், குருடனான சங்கீத வித்துவானைப் பார்க்கச் சம்மதித்தான். ஆயினும், அரசர்கள் குருடரைப் பார்ப்பது தக்கதல்லவெனக் கருதி, ஒரு திரை போடச் சொல்லி, அரசன் திரையின் ஒரு புறத்திலும், குருடன் மறபுறத்திலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

திரை போட்டிருப்பது சங்கீதவித்துவானுக்குத் தெரியாது. அரசனைப் பார்க்காது யாழை வாசித்துப் பாடும்படி அரசனுடைய மந்திரிமார' அவனுக்குச் சொன்னார்கள். அச் சமயத்தில் அரசன் தன் ராஜ உடையைக் கழற்றி விட்டுக் கையில் அம்பும் வில்லும் தரித்து, யுத்த வீரன் வேஷத்தோடு நின்றான். உடனே சங்கீத வித்துவான் அதைத் தன் அரிய சக்தியால் உணர்ந்து, அரசனை வில்வித்தையிற் சிறந்த ஸ்ரீஇராமனுக்கு ஒப்பிட்டு, மிக்க அருமையான பாட்டொன்றைப் பாடி அவனைப் புகழ்ந்தான்.

அரசன், இன்னும் அவனை பரீட்சிக்கக் கருதி, அந்த உடையை மாற்றிவிட்டு, இராணியுடைய உடையைக் தரித்துக் கொண்டான். வித்துவான் அதையறிந்து அரசனை இலட்சுமிக்கு ஒப்பிட்டு, யாழாகிய துணைக் கருவியை மீட்டி வெகு இனிமையாய் இன்னொரு பாடலைப் பாடினான். பிறகு அரசன் அந்த உடையையும் நீக்கிவிட்டு இராஜ உடையைத் தரித்துக் கொண்டான். உடன் அந்தச் சங்கீத வித்துவான் "ஏகச் சக்கராதிபதியாகியரசனே ! நீடூழிவாழ்க." என்னும் கருத்தையமைத்து அரசனைப் புகழ்ந்து, மனதை உருக்குமாறு வெகு இனிமையாயும் சாதுரியமாயும் பாடினான். அரசன் இவற்றைக் கண்டு வியப்படைந்து பாடகனை மிகவும் மெச்சி ஒரு யானையையும், இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்தையும் அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

இராஜ சபையிலிருந்த மற்றப் பெரியோரும் பாடகனுடைய திறமையை மெச்சி பல விலையுயர்ந்த பரிசுகளை அவனுக்கு இனாமாகக் கொடுத்தனர். அக்காலத்தில், அவனுக்குக் கொடுக்கப்பட்ட நாடு மணல் நிறைந்ததாயிருந்தது. ஆகையால் அதற்கு மணற்றிடல் என்ற பெயர் வழங்கி வந்தது. யாழ் வல்லவனாகிய பாணன் அதைப் பெற்றமையால் அதற்கு யாழ்ப்பாணம் என்னும் பெயருண்டாயிற்று. அதை இனாமாகப் பெற்ற வித்துவான், தென்னிந்தியாவுக்குச் சென்று தன் குலத்தவர்களையும் வேறு பல தமிழ்க் குடிகளையும் அழைத்துக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் குடியேற்றி தானே அங்கு அரசனாயிருந்து அரசு செலுத்திப் பின் னிறந்தான்.

அவனால் குடியேற்றப்பட்ட ஜனங்கள் அங்கு விருத்தியாகிப் பெருகினார்கள். யாழ்ப்பாண நாட்டுக்கு ஒரு விதமான கீர்த்தியுண்டாயிற்று. இது தான் யாழ்ப்பாண இராச்சியத்தின் உற்பத்தியென்று சில சரித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் போதிய ஆதாரமிருப்பதாகத் தோன்றவில்லை. மகாவம்சம் என்னும் நூலைக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தைப் பற்றி ஒன்றும் தீர்மானிக்க முடியாது. ஆயினும் யாழ்ப்பாணத்தைப் பற்றி எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை, கைலாயமாலை என்னும் நூல்களைக் கொண்டு நாம் யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தை ஒருவாறு கூறலாம். அதுவும் நம்பக் கூடிய சரித்திரமல்ல. ஆயினும் அதையும் இங்கு தருகிறோம்.

இலங்கையின் மீது படையெடுத்து வந்த தமிழசிற் சிலர், மன்னார், மாதோட்டம், மணற்றிடல் முதலிய இடங்களைத் தம்மதிகாரத்துக்குட்படுத்தி அரசு செலுத்தி வந்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாணம் குழுகளில்லாத மணற்றிடலாயிருந்தது. இந்த மணற்றிடலின் வடபாகத்தில் ஒரு சிறு மலையின் குகையொன்றில், கீரிமுகத்தையுடைய ஒரு முனிவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அந்த மலையிலிருந்து ஒரு சிற்றாறு உற்பத்தியாகிக் கடலில் பாய்ந்து கொண்டிருந்தது. கீரிமுகம் இருந்ததால் அந்த முனிக்கு நகுலமுனி என்றும், அம் முனிவர் வசித்த காரணத்தால் அம் மலைக்கு நகுலகிரி என்றும் பெயருண்டாயிற்று, இக் காலத்தில் அதற்குக் கீரிமலை என்ற பெயர் வழங்கி வருகிறது. அம் முனிவர் அச்சிற்றாற்றில் ஸ்நானம் செய்யவே, அவருடைய கீரி முகம் மாறி சிறந்த மனுஷ முகமுடையவரானார்.

அந்தச் சிந்றாற்றில் சிவபெருமான் பார்வதி சமேதராய் ஒரு காலத்தில் ஸ்நானம் செய்தாரென்றும் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்த போது அந்த நதியிலும் ஸ்நானம் பண்ணினானென்றும், நளச் சக்கரவர்த்தி கலி புருஷனால் வருந்திய போது அதில் ஸ்நானம் செய்து கலி தொலைந்து சுகப்பட்டானென்றும் பல புராணக் கதைகளுண்டு.

சோழ நாட்டிலே தஞ்சாவூரிலிருந்து அரசு செலுத்திக் கொண்டிருந்த திசையுக்கிர சோழன் குமாரத்தி மாருதப்புரவீகவல்லி குதிரை முகமுடையவளாயிருந்தாள். அவள் மேற் கூறிய சிற்றாற்றின் தீர்த்த மகிமையை கேள்விப் பட்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்று அந்தச் சிற்றாற்றில் ஸ்நானம் பண்ணினாள். உடனே அவளுடைய குதிரை முகம்மாறி, அவள். சிறந்த ரூபவதியானாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

ஆகும்.

எனவே, இன்றைய தினம் நடைபெற வுள்ள பாடசாலைப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு, கல்வித் திணைக் கள அதிகாரிகளுக்கு நாம் வேண்டு கோள் விடுத்துள்ளோம். யதார்த்த பூர்வமான முடிவு எடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

எது எப்படி இருந்தாலும், பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் இன்று புறக்கணிக்குமாறு எமது மாணவச் செல்வங்களை உரிமையோடு வேண் டிக் கொள்கின்றோம். பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

இன்று நிச்சயிக்கப்பட்டுள்ள பரீட் சையை, வேறு ஒரு தினத்தில் கல்வித் திணைக்களம் தாராளமாக நடத்த முடியும். எமது ஒத்துழைப்பும் அதற்கு இருக்கும் என்றுள்ளது. (ம-7,33,104)

## வவுனியா...

பயணிகள் இருக்கையில் அடையா ளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் உள்ளமை தொடர்பாக பொதுமக் களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் சட லத்தை மீட்டுள்ளதுடன் இது தொடர் பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## தமிழீழ...

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண் டும் உருவாக்க வேண்டும் என்பதே தமது முக்கிய நோக்கம் என அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்ற அரச நிகழ்வொன்றில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக இருந்த விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு கூறியிருந்தார்.

அவரது உரை இனங்களுக்கு இடை யிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் அமைந்தது என தெரிவித்து அன்றையதினமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத் தில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோதே அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட விஜய கலா மகேஸ்வரனை சட்டமா அதி பரின் ஆலோசனையின் பேரில் விடு தலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிரான வழக்கை தொடர்வதற்கு போதிய சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் அறி வுறுத்தியதாக பொலிஸார் முன்னதாக நீதிமன்றில் கூறியிருந்தனர். (ம-7)

## நாட்டில்...

வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத் துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக இவ்வாறு தெரிவித்தார்

இந்நாட்டில் எரிபொருளை விநி யோகிக்கும் வாய்ப்பை சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு-வழங்கிய தன் மூலம் வருடத்திற்கு சுமார் 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாட்டில் சேமிக்க முடியும் என எதிர்பார்க்கப்படு வதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## ஜனாதிபதி...

சீன ஜனாதிபதிக்கு இடையிலான சந் திப்பில் இலங்கையின் கடன் மறுசீர மைப்பு தொடர்பிலும் கலந்துரையாடப் படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## பொது முடக்கத்...

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத் தல் நடவடிக்கையானது உண்மை யில் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கை மட்டுமன்றி ஜனநாயகத்தின் மிகப் பிரதான தூண் களில் ஒன்றான நீதித்துறை சுதந்திரத் தினையும் கேள்விக்குட்படுத்துகின் றது. இந்நடவடிக்கையினை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமது சுயநல அரசியல் இலாபத்திற் காக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை கூறுபோட நினைக்கும் சக்தி களால் இதுபோன்ற பல்வேறு நட வடிக்கைகள் கடந்த காலங்களில் இருந்து தொடர்ச்சியாகவே இடம் பெற்று வருகின்றது. அவற்றிற்கு முற் றுப்புள்ளி வைக்கும் வகையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு மித்த குரலில் ஒன்றிணைந்து இன்று கடை யடைப்பு நடவடிக்கையில் ஒன்றுபடு வோம்.

நீதித்துறை சுதந்திரத்திற்கு நீதி கோருவதுடன், வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கட்ட விழ்த்துவிடப்படும் இதுபோன்ற சதித் திட்டங்களையும் தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து எதிர்கொண்டு முன் னோக்கிய பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வோமாக என்று இத்தருணத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம்.

நாம் "தமிழ் பேசும் மக்களாக" தொடர்ந்தும் முன்னோக்கி பயணிப் போம் என்பதை இன்று பொது முடக் கத்தில் ஒன்றிணைவதன் ஊடாக உறு திப்படுத்துவதுடன், பொது முடக்கத் தில் ஒன்றித்து நிற்கும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒருமித்த நிலைப்பாடு வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் - முஸ்லிம் மக்களை ஒருபோதும் பிரித்து கூறு போட முடியாது என்பதை பகிரங்கமாக அரசுக்கும் சர்வதேசத்திற்கும் வெளிப் படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## வடக்கு - கிழக்கு...

முல்லைத்தீவு நீதிபதி சரவண ராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தோடு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான தீர்ப்பை மாற்றுமாறு அழுத்தம்கொடுக் கப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிபதி நாட்டை விட்டு வெளியேறி னார்.

இதற்கு எதிர்ப் புத் தெரிவித்து கொழும்பு உட் பட நாட்டின் பல் வேறு பகுதிகளில் போராட்டம் முன் னெடுக்கப்பட் டது.

மேலும் நீதிக்கு நீதி கோரி வடக் குக் கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் முன் னெடுக்க 8 தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத் திருந்தன.

வட கிழக்கில் இன்று வியாழக் கிழமை பூரண ஹர்த்தால்அனுஷ் டிக்கப்படும் நிலையில் யாழ்ப் பாணத்தில் உள்ள அனை த்து நீதிமன்றங் களிலும் சட்டத் தரணிகள் பணி புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித் துள்ளனர்.

அதற்கமைய யாழ்ப்பாண நீதி மன்றம், மல்லாகம் நீதிமன்றம், சாவகச் சேரி நீதிமன்றம், பருத்தித்துறை நீதி மன்றம், ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஆகியவற்றின் சட்டத்தரணிகள் பணி புறக்கணிப்பை மேற்கொள்ள உள்ள னர். (ம-7,33,60,104)

## அறிவை...

தற்போதைய வங்குரோத்து நிலை யில் இருந்து நாட்டை மீட்டெடுக்க, அறிவை மையமாகக் கொண்ட பொரு ளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண் டும் என்றும், அறிவையும் கல்வியை யும் புத்திசாலித்தனத்தையும் மைய மாக வைத்து இந்தப் பள்ளத்தில் இருந்து வெளியேறுவது அவசியம் என்றாலும், அறிவையும் கல்வியை யும் புத்திசாலித்தனத்தையும் அழித்து, தேய்மானம் செய்து,அதைச் செயலி ழக்கச் செய்யும் நடைமுறையையே அரசு நடைமுறைப்படுத்தி வருவதாக வும், உயர்கல்வியை முற்றாக சீர் குலைக்கும் அரச ஆட்சி நடைபெறுவ தாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3514
சீட்டிழுப்பு திகதி 18.10.2023
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 07 11 17 34
D
24758
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.10.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1302
B 49 73 78 82 B
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance 18216

லக்கி 7 Lucky
திகதி 19.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0098
L7 இலக்கம் 0 2
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 6 3 0 6 7 8

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 581
வெற்றி இலக்கம்
சிம்மம் 15 21 37 48 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1620
N 04 06 10 62 63
Double Chance 56988

மஹஜன சம்பத
திகதி 2023/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 5272
ஆங்கில எழுத்து
வெல்லப்படும் இலக்கம்
Z 0 9 3 5 3 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2246
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.19
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
13 52 57 70 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,505,376.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2023.10.19 வெற்றி வாரம் 4407 வர்ணம் சிவப்பு
12 14 32 74 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,141,636.00
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 6 6 5 6 3
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3958
வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.19
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 09 14 18
மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
411860
384
DLB

திகதி 19.10.2023 வெற்றி வாரம் 1422
I 10 13 16 19 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 454,138,704.20
442322
484
DLB
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 638
திகதி 2023-10-19
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 18 33 68
விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,509,344.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2072
சீட்டிழுப்பு திகதி : 2023.10.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,881,088/-
37 39 41 60 V
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
854071
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DCM யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

A/L 2023

இறுதிக் கருத்தரங்கு

வணிகக்கல்வி

N.S.KAPIL BBM(Hons)


ஆரம்பம் 23.10.2023 திங்கள் பி.ப 2.30-5.30

30 மணித்தியாலங்கள் (30+)

- வெளிமாணவர்களும் இணைந்து கொள்ளலாம்
- பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.
- கையேடுகள் வழங்கப்படும்.

(C-7456)

077 011 9434 நிர்வாகம்

## மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் காலமானார்

உலக வாழ் இந்துக்கள் மத்தியில் மிகவும் பிரபலமான, தமிழகத்தின் மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் (வயது-82) நேற்று மாரடைப்பு காரணமாக காலமானார்.

ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை நிறுவி குருவாக இருந்து வந்த மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூரில் ஆதி பராசக்தி தியான பீடம் ஒன்றை உருவாக்கி புகழ் பெற்றவர். (ம-7)


IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17489)

தீபம் கல்வி நிலையம்

THEEBAM EDUCATION CENTRE

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். (கலைக்கோட்டம் அருகில்)

தரம் 6

- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

புதிய அனுமதிகள்

விஜயதசமி நன்னாளில்

24.10.2023 செவ்வாய்க்கிழமை முதல்..

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்" (17511)

அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 நிர்வாகி

காணி விற்பனைக்கு

செருக்கற்புலம், கோண்டாவில் எனும் முகவரியில் அமைந்துள்ள 'ஒரு பரப்பு' காணி நியாயமான விலையில் விற்பனைக்கு.

(17514)

077 002 8988

காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதியில் இருந்து 50 மீற்றர் தொலைவில்

(17520)

076 669 5590

Canada and Italy Visa

Canada மற்றும் Italy போன்ற நாடுகளுக்கான Short Term மற்றும் Long Term விசாக்கள் பெற்றுத் தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

077 038 5584 (17491)

VILLAGE HOTEL பஸ் சேவை

JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு

வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு

2800/= (17484)

T.P: 077 544 8503

அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?

*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி

*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7457)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

அமெரிக்க அதிஷ்ட விசா காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இன்னும் 14 நாட்களே

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 TRAVELS

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்

UK - 400/=, Canada - 1000/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

T.P : 0777 55 45 28 (17512)

321, K.K.S. Road, Jaffna.

அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. (17512)

077 755 4528


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் - வகை III
2. யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் - வகை III
3. யா/கதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - வகை III

**தகைமைகள் :**

- வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம்** III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக் குறைந்தது மூன்று வருடகாலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருந்தமாட்டாது.

**குறிப்பு :**

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக **2023.11.04** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2023(2)"** எனக் குறிப்பிடவும்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-7450)


விசா விண்ணப்பம்

கனடா பிரான்ஸ் லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

கனடா பொன்சர் விசா 20 மாத்திரம் உள்ளது.

Work visa 17 மாத்திரம் உண்டு. நவம்பர் 20 ஆம் திகதியுடன் Visa வை கனடா தற்காலிகமாக இடைநிறுத்தவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

ருமேனியா, சேர்பியா, கனடா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.

உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா?

கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

NSA Group of Company (Pvt) Ltd.

197, Main Street, Jaffna. (17521)

077 266 6429, 021 221 0599, 077 877 4838

குறிப்பிட்ட பொன்சர் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

077 623 4204
076 755 8606
077 076 0389

(17519)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org